# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.

யோவான் 15:5

THE THAMIZH PRADHESA ASSEMBLIES OF GOD

September - October 2026
Volume : 66

ஆண்டு சந்தா ₹120/-
Issue : 5

## 7th ANNUAL CONFERENCE OF THAMIZH PRADHESA ASSEMBLIES OF GOD






















ஆசிரியரிடமிருந்து........!



# அர்த்தமுள்ள வாழ்க்கை

**யோவான் 15:1-16**

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள்!.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறான். "என் வாழ்க்கை வீணாகிவிடக்கூடாது; நான் வாழ்வதினால் ஏதாவது நல்ல மாற்றம் ஏற்பட வேண்டும்; நான் மறைந்த பிறகும் என்னுடைய வாழ்க்கையின் தாக்கம் தொடர வேண்டும்" என்ற எண்ணம் நம் எல்லாருடைய இருதயத்திலும் இருக்கிறது. வாழ்க்கையில் நல்ல கல்வி பெறுவது, நல்ல வேலை செய்வது, பணம் சம்பாதிப்பது, வீடு கட்டுவது, பிள்ளைகளை வளர்ப்பது, பதவி பெறுவது, புகழ் பெறுவது, சாதனைகளைச் செய்வது போன்றவைகள் முக்கிய மானவையாக இருக்கலாம். ஆனால் இவை அனைத்தும் சேர்ந்து விட்டால்கூட, ஒரு வாழ்க்கை தேவனுடைய பார்வையில் அர்த்தமுள்ள வாழ்க்கையாகிவிடாது. ஒருவர் உலகத்தின் பார்வையில் வெற்றியாளராக இருக்கலாம்; ஆனால் தேவனுடைய பார்வையில் கனியற்றவராக இருக்கலாம். ஒருவர் அதிகமான செல்வத்தைச் சேர்த்திருக்கலாம்; ஆனால் நித்தியத்திற்காக எதையும் சேர்க்காமல் இருக்கலாம். ஒருவர் பலரால் அறியப்பட்டவராக இருக்கலாம்; ஆனால் தேவனோடு நெருக்கமான உறவு இல்லாமல் இருக்கலாம். "அர்த்தமுள்ள வாழ்க்கை என்பது தேவனுக்கு பிரியமானதாகவும், பிறருக்கு ஆசீர்வாதமாகவும், நித்தியம் வரை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் வாழ்க்கையாகும்."

யோவான் 15:1-16-ல் இயேசு திராட்சைச் செடியையும் அதன் கிளைகளையும் எடுத்துக்காட்டாகக் கொண்டு, தேவனுடைய பார்வையில் அர்த்தமுள்ள வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை நமக்குக் கற்றுக்கொடுக்கிறார். இயேசு, "நானே மெய்யான திராட்சைச் செடி, என் பிதா திராட்சைத் தோட்டக்காரர்" என்று கூறுகிறார். மேலும், "நானே திராட்சைச் செடி, நீங்கள் கிளைகள்" என்று அறிவிக்கிறார். இந்த உவமையின் அடிப்படை உண்மை மிகவும் தெளிவானது: ஒரு கிளைக்கு அர்த்தம் கிடைப்பது அது கொடியுடன் இணைந்திருக்கும் போதுதான், கொடியிலிருந்து பிரிக்கப்பட்ட கிளையால் கனிகொடுக்க முடியாது. அதுபோலவே, கிறிஸ்துவோடு இணைந்த வாழ்க்கையே உண்மையான அர்த்தமுள்ள வாழ்க்கை.

## கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வாழ்க்கை
## A CHRIST - CENTERED LIFE

அர்த்தமுள்ள வாழ்க்கையின் முதல் அடையாளம் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வாழ்க்கை. இயேசு, "**நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்**" என்று கூறுகிறார் (15:5). இன்றைய உலகம் வாழ்க்கையின் மையமாக பணம்,

பதவி, புகழ், வசதி, அதிகாரம், கல்வி, தொழில், குடும்பம், சாதனை போன்ற பலவற்றை முன்வைக்கிறது. இவை அவற்றுக்குரிய இடத்தில் முக்கியமானவை என்றாலும், அவை எதுவும் கிறிஸ்துவின் இடத்தைப் பெறக்கூடாது. இயேசு நம்முடைய வாழ்க்கையில் ஒரு பகுதியாக மட்டும் இருக்க விரும்பவில்லை; அவர் நம்முடைய வாழ்க்கையின் மையமாக இருக்க விரும்புகிறார். கிளை கொடியைச் சார்ந்திருப்பதைப் போல, நாம் கிறிஸ்துவைச் சார்ந்திருக்க வேண்டும். நம்முடைய பெலன், ஞானம், சமாதானம், சந்தோஷம், நம்பிக்கை, வெற்றி ஆகியவற்றின் ஆதாரம் கிறிஸ்துவாக இருக்க வேண்டும். இயேசு, என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்று கூறுகிறார். கிறிஸ்துவை விட்டு நாம் பல காரியங்களைச் செய்யலாம்; ஆனால் நித்திய மதிப்புள்ள காரியங்களை அவரை விட்டு பிரிந்து செய்ய முடியாது. சில நேரங்களில் நாம் கிறிஸ்துவுக்காக மிகவும் பிஸியாக இருக்கிறோம்; ஆனால் கிறிஸ்துவோடு நெருக்கமாக இல்லை. ஊழியம் இருக்கிறது; ஆனால் உறவு இல்லை. செயல்பாடு இருக்கிறது; ஆனால் ஆவிக்குரிய வாழ்க்கை இல்லை. எனவே அர்த்தமுள்ள வாழ்க்கையின் முதல் இரகசியம், கிறிஸ்துவில் நிலைத்திருப்பதாகும்.

## வேதவார்த்தையில் வேரூன்றிய வாழ்க்கை
## A BIBLE - ANCHORED LIFE

இரண்டாவதாக, அர்த்தமுள்ள வாழ்க்கை வேத வார்த்தையில் வேரூன்றிய வாழ்க்கையாக இருக்க வேண்டும். இயேசு, **"என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால்"** என்று கூறுகிறார் (15:7). இன்றைய உலகத்தில் எண்ணற்ற குரல்கள் நம்மை வழிநடத்துகின்றன. சமூக ஊடகங்கள், நண்பர்கள், கலாச்சாரம், ஊடகங்கள், விளம்பரங்கள், பிரபலங்கள் என பல குரல்கள் நம்முடைய சிந்தனைகளையும் முடிவுகளையும் பாதிக்கின்றன. ஆனால் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையை ஆள வேண்டிய முதன்மையான குரல் தேவனுடைய வார்த்தையாகும். சங்கீதம் 119:105 கூறுகிறது: "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." வேதாகமத்தை வாசிப்பது மட்டும் போதாது; வேதவார்த்தை நம்மில் நிலைத்திருக்க வேண்டும். அது நம்முடைய சிந்தனைகளை மாற்ற வேண்டும்; நம்முடைய தீர்மானங்களை வழிநடத்த வேண்டும்; நம்முடைய குடும்ப உறவுகளை வடிவமைக்க வேண்டும்; பணத்தைப் பயன்படுத்தும் முறையை மாற்ற வேண்டும்; நம்முடைய பேச்சை பரிசுத்தப்படுத்த வேண்டும். வேதவார்த்தையில் ஆழமான வேர்கள் இருந்தால் வாழ்க்கையில் நிலைத்தன்மை இருக்கும் (சங்கீதம் 1). எனவே அர்த்தமுள்ள வாழ்க்கை என்பது தேவனுடைய வார்த்தையால் வழிநடத்தப்படும் வாழ்க்கை.

## ஜெபத்தால் ஆதரிக்கப்படும் வாழ்க்கை
## A PRAYER - SUPPORTED LIFE

மூன்றாவதாக, அர்த்தமுள்ள வாழ்க்கை ஜெபத்தால் ஆதரிக்கப்படும் வாழ்க்கை. யோவான் 15:7-ல் இயேசு, **"நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்கு உண்டாகும்"** என்று கூறுகிறார். கிறிஸ்துவில் நிலைத்திருப்பதும், அவரது வார்த்தை நம்மில் நிலைத்திருப்பதும் ஜெபத்திற்கான அடித்தளமாகிறது. ஜெபம் என்பது வெறுமனே தேவனிடம் நம்முடைய தேவைகளைச் சொல்லும் செயலல்ல; அது தேவனைச் சார்ந்திருப்பதின் வெளிப்பாடு. நாம் ஜெபிக்கும்போது, "ஆண்டவரே, எனக்கு உமது ஞானம் தேவை; என்னால் தனியாக முடியாது; என் பெலன் போதாது; உமது வழிநடத்துதல் எனக்குத் தேவை" என்று ஒப்புக்கொள்கிறோம். ஜெபமில்லாத வாழ்க்கை மெதுவாக தேவனைச் சார்ந்திருப்பதை இழக்கத் தொடங்குகிறது. ஆதி

சபையின் வல்லமைக்குப் பின்னால் ஜெபம் இருந்தது. அப்போஸ்தலர் 1:14-ல் அவர்கள் ஒருமனப்பட்டு ஜெபத்தில் தரித்திருந்தார்கள்; அதன் பின்னர் அப்போஸ்தலர் 2-ல் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான செயல்பாட்டைக் காண்கிறோம். நம்முடைய குடும்பங்களுக்கு ஜெபிக்கும் பெற்றோர் தேவை; நம்முடைய சபைகளுக்கு ஜெபிக்கும் மக்கள் தேவை; நம்முடைய தலைமுறைக்கு ஜெபிக்கும் ஊழியர்கள் தேவை. ஜெபம் அதிகரிக்கும் இடத்தில் தேவனைச் சார்ந்திருத்தலும் அதிகரிக்கும். எனவே அர்த்தமுள்ள வாழ்க்கை என்பது ஜெபத்தால் ஆதரிக்கப்படும் வாழ்க்கையாகும்.

## கனிகொடுக்கும் வாழ்க்கை
## A FRUIT - BEARING LIFE

நான்காவதாக, அர்த்தமுள்ள வாழ்க்கை கனிகொடுக்கும் வாழ்க்கை. யோவான் 15:8 இந்தப் பகுதியின் மையமான வசனங்களில் ஒன்றாகும்: **"நீங்கள் மிகுந்த கனிகளை கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்; எனக்கும் சீஷர்களாயிருப்பீர்கள்."** தேவன் நம்மை இரட்சித்தது வெறுமனே இரட்சிக்கப்பட்டவர்களாக இருப்பதற்காக மாத்திரம் அல்ல; கனிகொடுக்கும் சீஷர்களாக இருப்பதற்காக. கனி என்பது நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் குணம் வெளிப்படுவதைக் குறிக்கிறது. கலாத்தியர் 5:22,23-ல் குறிப்பிடப்படும் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவை நம்முடைய வாழ்க்கையில் வளர வேண்டும். நம்முடைய வாழ்க்கையைப் பார்த்து மக்கள், "இவரில் கிறிஸ்துவின் அன்பு இருக்கிறது; இவருடைய வாழ்க்கையில் சமாதானம் இருக்கிறது; இவர் மன்னிக்கத் தெரிந்தவர்; இவர் உண்மையுள்ளவர்; இவர் தேவனை உண்மையாக நேசிக்கிறார்" என்று சொல்லக்கூடியதாக இருக்க வேண்டும். ஆனால் கனி என்பது கிறிஸ்தவ குணநலன்கள் மட்டும் அல்ல; நம்முடைய வாழ்க்கை மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும். நாம் வாழ்வதால் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும்; நாம் ஊழியம் செய்வதால் மக்கள் கிறிஸ்துவை அறிய வேண்டும்; நாம் வாழ்ந்ததால் அடுத்த தலைமுறை தேவனைத் தேட வேண்டும். இயேசு "கனி கொடுங்கள்" என்று மட்டும் சொல்லவில்லை; "மிகுந்த கனிகளை கொடுங்கள்" என்று சொல்கிறார். எனவே அர்த்தமுள்ள வாழ்க்கை என்பது அதிகமாக கனிகொடுக்கும் வாழ்க்கை.

அதிக கனிகளை கொடுக்க சுத்திகரிக்கப்படுவது அவசியம். இயேசு, "கனிகொடுக்கிற கொடியெல்லாவற்றையும் அதிக கனிகொடுக்கும்படி சுத்தம் பண்ணுகிறார்" என்று கூறுகிறார். சில நேரங்களில் தேவன் நம்முடைய வாழ்க்கையில் வெட்டிச் சீர்செய்யும் பணியைச் செய்கிறார். நாம் விரும்பிய ஒரு காரியத்தை அவர் அகற்றலாம்; ஒரு கதவை மூடலாம்; நம்முடைய திட்டங்களை மாற்றலாம்; நம்முடைய பெருமையைத் தொடலாம்; நம்முடைய தவறான மனப்பான்மையை வெளிப்படுத்தலாம்; நம்முடைய வாழ்க்கையில் தேவையில்லாத ஒன்றை விட்டுவிடச் சொல்லலாம். அந்தச் சுத்திகரிப்பு சில நேரங்களில் வேதனையாக இருக்கலாம். ஆனால் அது தேவனுடைய நிராகரிப்பு அல்ல. அது அதிக கனிக்கான ஆயத்தம். தேவன் நம்முடைய சௌகரியத்தைவிட நாம் கனி கொடுக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டிருக்கிறார். எனவே நம்முடைய வாழ்க்கையில் சில சிரமங்கள் அல்லது மாற்றங்கள் வந்தாலும், தேவன் எனக்கு ஏன் இப்படிச் செய்கிறார்? என்று மட்டும் கேட்காமல், "தேவன் கனிகொடுக்கும் வாழ்க்கைக்காக என்னை இதன் மூலம் எவ்வாறு சுத்திகரிக்கிறார்?" என்று கேட்பது அவசியம்.

## அன்பினால் உந்தப்படும் வாழ்க்கை
## A LOVE – MOTIVATED LIFE

ஐந்தாவதாக, அர்த்தமுள்ள வாழ்க்கை அன்பினால் உந்தப்படும் வாழ்க்கை. இயேசு, **"பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல, நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்"** என்று கூறுகிறார் (15:9). கிறிஸ்தவ வாழ்க்கையின் மையத்தில் அன்பு இருக்க வேண்டும். நாம் தேவனை நேசிப்பதால் அவருக்கு ஊழியம் செய்கிறோம்; அவரை நேசிப்பதால் கீழ்ப்படிகிறோம்; அவரை நேசிப்பதால் பிறரை நேசிக்கிறோம். அன்பில்லாத ஊழியம் வெறும் செயல்பாடாகிவிடும். ஒருவர் பெரிய ஊழியம் செய்யலாம், பிரசங்கிக்கலாம், பாடலாம், கொடுக்கலாம், தியாகம் செய்யலாம்; ஆனால் அன்பில்லாமல் செய்தால் அது தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றாது. 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரம் அன்பில்லாத ஆவிக்குரிய செயல்பாடுகளின் வெறுமையை நமக்கு நினைவூட்டுகிறது. நாம் என்ன செய்கிறோம் என்பதை மட்டும் தேவன் பார்ப்பதில்லை; ஏன் செய்கிறோம், எதற்காக செய்கிறோம் என்பதையும் பார்க்கிறார். கிறிஸ்துவின் அன்பை நாம் உண்மையாக அனுபவித்தால், நம்முடைய வாழ்க்கையிலும் அந்த அன்பு வெளிப்படும். நாம் சென்ற இடங்களில் எவ்வளவு பணத்தை விட்டுச் சென்றோம் என்பதைக் காட்டிலும், எவ்வளவு அன்பை விட்டுச் சென்றோம் என்பதே முக்கியமானது.

## சந்தோஷம் நிறைந்த வாழ்க்கை
## A JOY - FILLED LIFE

ஆறாவதாக, அர்த்தமுள்ள வாழ்க்கை சந்தோஷம் நிறைந்த வாழ்க்கை. இயேசு, **"என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்"** என்று கூறுகிறார் (15:11). இது உலகம் கொடுக்கும் தற்காலிக மகிழ்ச்சி அல்ல; கிறிஸ்துவிடமிருந்து வரும் ஆவிக்குரிய சந்தோஷம். உலகத்தின் மகிழ்ச்சி சூழ்நிலைகளைச் சார்ந்திருக்கிறது. சூழ்நிலை மாறினால் மகிழ்ச்சியும் மாறிவிடுகிறது. ஆனால் கிறிஸ்துவின் சந்தோஷம் சூழ்நிலைகளைத் தாண்டியது. பவுலும் சீலாவும் சிறையில் இருந்தபோதும் ஜெபித்து தேவனைத் துதித்தார்கள். அவர்களைச் சுற்றியிருந்த சூழ்நிலை சந்தோஷத்திற்கான காரணமாக இருக்கவில்லை; அவர்களுக்குள் இருந்த கிறிஸ்துவே அவர்களின் சந்தோஷத்தின் ஆதாரமாக இருந்தார். கிறிஸ்தவனுடைய சந்தோஷம் இரட்சிப்பில், மன்னிப்பில், தேவனுடைய பிரசன்னத்தில், ஜெபத்தின் பதிலில், ஊழியத்தில், மற்றவர்கள் கிறிஸ்துவிடம் வருவதைக் காண்பதில் இருக்கிறது. நாம் கஷ்டங்களின் நடுவிலும் கிறிஸ்துவின் சந்தோஷத்துடன் வாழும்போது, உலகம் நம்முடைய வாழ்க்கையில் உள்ள வித்தியாசத்தைப் பார்க்கிறது. கிறிஸ்துவின் சந்தோஷம் நம்முடைய வாழ்க்கையை ஒரு சாட்சியாக மாற்றுகிறது.

## கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை
## AN OBEDIENT LIFE

ஏழாவதாக, அர்த்தமுள்ள வாழ்க்கை கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை. யோவான் 15:14-ல் இயேசு, **"நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்"** என்று கூறுகிறார். இங்கே இயேசு ஒரு முக்கியமான உண்மையை வெளிப்படுத்துகிறார்: கிறிஸ்துவை நேசிப்பதாகச் சொல்வது மட்டும்

போதாது; அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதும் அவசியம். யோவான் 14:15-ல், “நீங்கள் என்னில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்” என்று இயேசு கூறுகிறார். உண்மையான அன்பின் வெளிப்பாடு கீழ்ப்படிதல். இன்று நமக்கு தேவ வார்த்தையை அறிந்துகொள்ள ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. வேதாகமங்கள், பிரசங்கங்கள், வேதபாடங்கள், புத்தகங்கள், இணையவழி போதனைகள் என எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளன. ஆனால் நம்முடைய மிகப்பெரிய தேவை இன்னும் அதிகமான அறிவு அல்ல; நாம் அறிந்த தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிதலே. தேவன் என்னிடம் என்ன சொல்கிறார்? நான் அதற்குக் கீழ்ப்படிகிறேனா? தேவன் விட்டுவிடச் சொன்னதை நான் இன்னும் பிடித்துக் கொண்டிருக்கிறேனா? தேவன் செய்யச் சொன்னதை நான் தாமதப்படுத்துகிறேனா? அர்த்தமுள்ள வாழ்க்கை என்பது கேட்கும் வாழ்க்கை மட்டுமல்ல; கீழ்ப்படியும் வாழ்க்கையாகும்.

இந்த ஏழு அம்சங்களையும் ஒன்றாகப் பார்க்கும்போது, இயேசு நமக்கு அர்த்தமுள்ள வாழ்க்கைக்கான ஒரு முழுமையான பாடத்தை கற்றுத் தருகிறார். யோவான் 15-ம் அதிகாரத்தில் நம்மை ஒரு ஆழமான சுயபரிசோதனைக்கு அழைக்கிறது. நான் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வாழ்க்கை வாழ்கிறேனா? **தேவ வார்த்தை என்னில் நிலைத்திருக்கிறதா? என்னுடைய ஜெப வாழ்க்கை உயிரோட்டமாக இருக்கிறதா? என்னுடைய வாழ்க்கையில் கனி இருக்கிறதா? என்னுடைய குடும்பம் என்னுடைய வாழ்க்கையினால் ஆசீர்வதிக்கப்படுகிறதா? என்னைச் சந்திப்பவர்கள் கிறிஸ்துவின் அன்பை அனுபவிக்கிறார்களா? சூழ்நிலைகளைத் தாண்டிய கிறிஸ்துவின் சந்தோஷம் என்னில் இருக்கிறதா? தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறேனா?** இவைதான் நம்முடைய வாழ்க்கையை மதிப்பிட வேண்டிய உண்மையான கேள்விகள்.

ஒருநாள் நம்முடைய பூமிக்குரிய வாழ்க்கை முடிவடையும். நம்முடைய பணம் நம்முடன் வராது. நம்முடைய பதவி நம்முடன் வராது. நம்முடைய புகழ் நம்முடன் வராது. நம்முடைய வீடுகளும் சொத்துக்களும் நம்முடன் வராது. நம்முடைய சாதனைகளும் இங்கேயே இருக்கும். ஆனால் நாம் கிறிஸ்துவுக்காக வாழ்ந்த வாழ்க்கையின் நித்திய விளைவு தொடர்ந்து இருக்கும். நாம் யாருடைய வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டு வந்தோம்? யாரை கிறிஸ்துவண்டை வழிநடத்தினோம்? யாரை ஊக்கப்படுத்தினோம்? எத்தனை குடும்பத்திற்கு ஆசீர்வாதமாக இருந்தோம்? அடுத்த தலைமுறைக்கு விசுவாசத்தை ஒப்படைத்தோமா? எவ்வளவு கிறிஸ்துவின் குணத்தை வெளிப்படுத்தினோம்? என்பவையே முக்கியமான கேள்விகள்.

நம்முடைய வாழ்க்கை மனிதர்களுடைய பார்வையில் மட்டுமல்ல, தேவனுடைய பார்வையிலும் அர்த்தமுள்ளதாக இருக்கட்டும். நம்முடைய வாழ்க்கை கனிகொடுக்கட்டும். நம்முடைய குடும்பங்கள் நம்மால் ஆசீர்வதிக்கப்படட்டும். நம்முடைய சபை நம்மால் பலப்படட்டும். நம்முடைய நகரம் நம்முடைய சாட்சியால் தொடப்படட்டும். அடுத்த தலைமுறை நம்முடைய விசுவாசத்தினால் தேவனை அறியட்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய வாழ்க்கையின் மூலம் இயேசு கிறிஸ்து மகிமைப்படட்டும்.

கிறிஸ்துவில் நிலைத்திருப்போம். கனிகொடுப்போம். தேவனை மகிமைப் படுத்துவோம். அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வோம்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.



# நோவாவின் குடும்பம்

(ஆதியாகமம் 6-8)


**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**

Senior Pastor, Assembly of God Church, Vellore

Secretary - The Thamizh Pradhesa Assemblies of God


வேதத்தில் அநேக குடும்பங்களை குறித்து ஆண்டவர் பதிவு செய்து வைத்திருக்கிறார். அதிலே நாம் கவனிக்க வேண்டிய ஒரு குடும்பம் “நோவாவின் குடும்பம்”. நோவா, கர்த்தர் கொடுத்த தரிசனத்தில், அவருடைய வார்த்தையை அப்படியே ஜனங்களுக்குப் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் தன்னுடைய குடும்பத்தை முழுவதும் ஆதாயப்படுத்த அவர் தவறவில்லை. நம்முடைய குடும்ப வாழ்க்கைக்கு சில காரியங்களை நோவாவின் குடும்பத்திலிருந்து கற்றுக்கொள்ள ஆண்டவர் உதவி செய்வாராக.

### 1. நோவாவின் தரிசனத்தை முழு குடும்பமும் ஏற்றுக்கொண்டது
### They CONCEIVED the same vision

ஆண்டவர் நோவாவை கொண்டு செய்ய நினைத்த காரியம் சரித்திரத்தில் ஒரு பெரிய மாற்றம். ஆனால், அது அவ்வளவு எளிமையானது அல்ல. அவை இதுவரையும் நடந்திராத ஒன்று, நம்புவதற்கு கடினமானது மற்றும் மனித மூளைக்கு புத்தியீனமான ஒன்று. ஆனால், ஆண்டவர் சொன்னதை நோவா அப்படியே செய்தான் என்று ஆதியாகமம் 6:22ல் கூறப்பட்டுள்ளது. நோவா மாத்திரம் அல்ல அவனுடைய முழு குடும்பமும் அந்த பரம தரிசனத்திற்கு கீழ்படிந்தது. உங்களுடன் தான் ஆண்டவர் பேசினார், ஆகவே நீங்களே அதை செய்து கொள்ளுங்கள் என்று அவருடைய மனைவி கூறவில்லை. ஏன் இந்த வயதில் உங்களுக்கு வேண்டாத வேலை என்று பிள்ளைகளும் கேட்கவில்லை. இது சாத்தியமா, உங்கள் அப்பாவிற்கு எடுத்து சொல்லுங்கள் என்று மருமகள்களும் கூறவில்லை. அனைவரும் அந்த பரம தரிசனத்தை ஏற்றுக் கொண்டு “ஒரே தரிசனம், ஒரே நோக்கம்” என்று செயல்பட்டார்கள்.

இன்றைக்கு குடும்பங்கள் சமாதானமாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்க தேவன் காண்பிக்கிற ஒரே பாதையில் குடும்பமாக செல்லுவது மிகவும் அவசியம். பிரிவினைகளுக்கு இடம் கொடுக்காமல், திருச்சபையை மையமாக வைத்து, சத்தியத்தின் அடிப்படையில் ஒரே நோக்கத்தில் பயணிக்க தீர்மானிக்கும் போது, நம்முடைய குடும்பத்தை தேவன் பாதுகாப்பார்.

### 2. நோவாவின் குடும்பம் தேவனோடு நெருங்கிய தொடர்பில் இருந்தது
### They had close COMMUNION with God

நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான் என்பதை ஆதியாகமம் 6:9ல் கூறப்பட்டுள்ள வசனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். அவனுடைய முழு குடும்பமும் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். நோவா அந்த சமயத்தில் ஒரு முன்பின் அறிந்திராத ஒரு பேழையை கட்டவேண்டும், அதற்கு தேவையான மரங்களை கொண்டு வரவேண்டும், இவைகளின் மத்தியிலும் தேவனுடைய வார்த்தையை ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும். ஆனாலும் நோவா தேவனோடு சஞ்சரிப்பதையும் குடும்பத்தோடு நேரம் செலவழிப்பதையும் அவன் மறக்கவில்லை. நோவா வேலை, வேலை என்று வேலையிலே மூழ்கியிருந்தால் நிச்சயமாய் அவருடைய குடும்ப ஒத்துழைப்பு கிடைத்திருக்காது. தேவ திட்டம் தேசத்தில் நிறைவேற, தன்னுடைய குடும்ப அர்ப்பணிப்பு முக்கியமானது என்று தன்னுடைய சிந்தனையில் எப்பொழுதும் அவர் சுமந்து கொண்டேயிருந்தார். அதன் பயனாக,

- ✶ தேவனுடைய திட்டம் அவருடைய முழு குடும்பத்திற்கும் விளங்கியது.
- ✶ தேவ பயம் உண்டானது.
- ✶ தேவனுடைய வார்த்தையை நம்பினார்கள்.
- ✶ தேவன் காண்பிக்கும் அனுகூலங்கள் கிடைக்கப்பெற்றது.

"நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம்" என்பதே நம்முடைய வாழ்வின் அடித்தளமாக இருக்கட்டும். எவ்வளவு வேலைகள் இருந்தாலும், தனியாகவும், குடும்பமாகவும் தேவனோடு நேரம் செலவழிப்பதை பிரதானப்படுத்துவோம். உங்கள் வீட்டில் குடும்பத்தோடு ஜக்கியமாய் சேர்ந்து ஜெபிக்கிற பழக்கங்கள் உண்டா என்பதை சிந்தித்துப் பார்ப்போம்.

### 3. நோவாவின் குடும்பத்திற்குள்ளே, ஒருவருக்கொருவர் நெருங்கிய தொடர்பில் இருந்தார்கள்
### They had strong CONNECTION with each other

அன்றைத்தினமே.... பேழைக்குள் பிரவேசித்தார்கள் என்று ஆதியாகமம் 7:13ல் வாசிக்கிறோம். நோவாவின் குடும்பத்தைத் தவிர மற்ற எந்த குடும்பமும் இரட்சிக்கப்படவும் இல்லை. பேழைக்குள் வருவதற்கு ஒருவர் கூட ஆயத்தமாக இல்லை. ஆனால் நோவாவின் குடும்பம் முழுவதும் வந்தது. பேழைக்குள் வருவதற்கு ஆயத்தப்படுத்த முடியவில்லை என்று நோவாவின் இருதயத்தில் வேதனைகளும், ஏக்கங்களும் இருந்தாலும் குடும்பம் கைவிடப்படவில்லை என்ற நிறைவான மகிழ்ச்சி அவர் உள்ளத்தில் இருந்தது.

இவ்வளவு பெரிய திட்டத்தை, நிச்சயமாக நோவா தனிமையாக செய்திருக்க முடியாது. கொப்பேர் மரமாக பார்த்து எடுக்க வேண்டும்,வெட்ட வேண்டும், கர்த்தர் சொன்ன அளவில் உருவாக்க வேண்டும், கீல் பூசவேண்டும். மிருகங்களையும், பறவைகளையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். It was a team project. Their hearts were connected together.

இருதயங்கள் இணைந்திருந்தபடியால்,

- ✶ தேவ திட்டம் எளிமையானது (God's plan became easy).
- ✶ முழு ஒத்துழைப்பு சாத்தியமானது (Full co-operation was achieved).
- ✶ வேலை முடிக்கப்பட்டது (God's work was completed).
- ✶ தெய்வீக ஆசீர்வாதங்கள் சுதந்தரிக்கப்பட்டது (Divine blessings were inherited).
- ✶ தெய்வீக பாதுகாப்பு உண்டானது (Divine protection was experienced).

ஒரே பாதையில் பயணிப்பதும், தேவனோடு நெருங்கி குடும்பமாக ஜீவிப்பதும், குடும்பத்தில் உள்ள அனைவரோடு நெருங்கிய தொடர்பில் இருப்பதும், இன்றைய காலத்தின் அவசியங்கள். குடும்பங்களை சீரழிக்க நினைக்கிற பிசாசின் தந்திரங்களை முறியடிப்பதற்கு, நம்முடைய இருதயங்கள் ஆண்டவரோடும் நம் குடும்பத்தினர் ஒவ்வொருவரோடும் இணைந்திருப்பது மிகவும் அவசியம். வீட்டில் உள்ள மகன்கள் மாத்திரமல்ல, மகள்களாக வீட்டிற்கு கொண்டு வரப்பட்ட மருமகள்களையும் ஆதாயப்படுத்துகிற கிருபைகளை நோவாவிற்கு கொடுத்தது போல நமக்கும் ஆண்டவர் தருவாராக.

மூன்று குறிப்புகள்தான் எழுதுவதற்கு இடம் உண்டு. தொடர்ந்து நோவாவின் குடும்பத்தை தியானியுங்கள் சத்தியங்களை கற்றுக்கொள்ளுங்கள், செயல்படுத்த ஆரம்பியுங்கள். வித்தியாசங்களை பார்க்க கர்த்தர் உதவி செய்வார்.

ஆண்டவரே! நோவாவின் குடும்பத்தை போல எங்கள் குடும்பங்களை மாற்றும். ஆமென்.



# கர்த்தர் உன்னைக் காப்பார்

**Dr. ராணி ஜெயச்சந்திரன்**

நிர்வாகக்குழு உறுப்பினர், தமிழ் பிரதேசப் பெண்கள் ஊழியம்

ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தினாலே பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

“சங்கீதம் 121:7 கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்”.

சங்கீதம் 121 ஆரோகண சங்கீதம் என்று அழைக்கப்படும். இஸ்ரவேலர் வருடத்திற்கு மூன்று முறை எருசலேமுக்கு பண்டிகைக் கொண்டாட போவார்கள். எருசலேம் பட்டணம் ஒரு மலை மேல் இருக்கிறது. வழி பயணம் ஆபத்து நிறைந்தது. அதினால் இந்த சங்கீதம் 121யை பாடிக்கொண்டு மலை ஏறி செல்வார்கள். எப்பொழுது ஆண்டவரை ஆராதிக்க வேண்டும் என்று ஒரு அடி எடுத்து வைக்கிறோமோ, அப்பொழுதே ஆண்டவருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் நம்மை சூழ்ந்து கொள்ளும். கர்த்தர் எல்லாத் தீங்கிற்கும் நம்மை விலக்கிக் காப்பார்.

எப்படியெல்லாம் காப்பார்?

1. **நமக்குள் இருந்து காப்பார்.**
2. **கரத்தைப் பிடித்துக் காப்பார்.**
3. **நம் பாதங்களை காப்பார்.**
4. **நம் எலும்புகளையெல்லாம் காப்பார்.**

## 1.நமக்குள் இருந்து காப்பார்

யோவான் 15:4-ல் “**என்னில் நிலைத்திருங்கள் நான் உங்களில் நிலைத்திருப்பேன்**” என்று இயேசு சொன்னார், சொன்னவர் எப்படிப்பட்டவர் தெரியுமா!

ஏசாயா 42:13-ல் “**கர்த்தர் பராக்கிரமசாலியைப்போல் புறப்பட்டு, யுத்தவீரனைப்போல் வைராக்கியமூண்டு, முழங்கிக் கெர்ச்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்**”. நமக்குள் இருந்து முழங்குவார், கெர்ச்சிப்பார் சத்துருக்களை மேற்கொள்ளுவார். ஆம், உலகத்திலிருக்கிறவனைப் பார்க்கிலும் நமக்குள் இருக்கும் தேவன் பெரியவர் **எல்ஷடாய்-பராக்கிரமம் நிறைந்தவர்.** எதைக் குறித்தும் கலங்க வேண்டாம், உன் தேவன் உனக்குள் பராக்கிரமசாலியாய் இருக்கிறார்.

உன்னைக் காப்பார், உனக்காக யுத்தம் செய்வார். யூதா கோத்திர சிங்கத்தின் கெர்ச்சனை உன்னிலிருந்து எழும்பும். சத்துருவினுடைய திட்டங்கள் சிதறடிக்கப்பண்ணுவார். கர்த்தர் உனக்குள் இருந்து உன்னை காப்பார். ஏழுவழியாக சத்துருக்கள் சிதறி ஓடுவார்கள். ஒரு தீங்கும் உன்னை அணுகவே விடமாட்டார்.

## 2. கரத்தைப் பிடித்து காப்பார்

**ஏசாயா 41:13-ல் உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.**

நம்மை படைத்தவரே நம்மைப் பாதுகாக்கிறார்.

நம்மை சிருஷ்டித்தவரே நம்மேல் சிந்தை வைக்கிறார்.

நம்மை உருவாக்கினவரே நமக்கு உதவியாக இருக்கிறார்.

ஆண்டவர் சொல்லுகிறார் என் பிள்ளையே என்றைக்கு உன்னை நான் கரம் பிடித்தேனோ பெருவெள்ளம் வரலாம், பெருங்காற்று அடிக்கலாம். ஆனால் ஒன்றும் உன்னை சேதப்படுத்த முடியாது. ஏனென்றால் உன் கரத்தைப் பிடித்திருக்கிற நான் வல்லமையுள்ளவராய், அதிசயங்களைச் செய்கிறவராய், அனைத்தையும் அடக்கி ஆளும் அதிகாரம் உடையவராய் இருக்கிறேன். பயப்படாதே, சூழ்நிலையை பார்த்து சோர்ந்து போகாதே, உன் கரத்தைப் பிடித்திருக்கிற என்னை நோக்கிப் பார்! உன்னைக் கரம் பிடித்து நான் மரண பரியந்தமும் நடத்துவேன்.

திருமணத்தின்போது மணமகனும், மணமகளும் உடன்படிக்கை செய்வார்கள். அநேகர் அந்த உடன்படிக்கையில் உண்மையாயிருப்பதில்லை. ஆனால் நம் தேவன் உண்மையுள்ளவர், கைவிடாதவர் உலகத்தின் முடிவு பரியந்தமும் சதாகாலமும் நம்மோடிருப்பவர். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று வாக்கு பண்ணின நம் தேவன் முடிவு பரியந்தமும் நடத்துவார்.

### 3. பாதங்களைப் பாதுகாப்பார்

1 சாமுவேல் 2ம் அதிகாரத்தில் அன்னாள் தன் பொருத்தனைகளை நிறைவேற்றும்படியாய் சின்ன குழந்தை சாமுவேலை ஆசாரியனாகிய ஏலியினிடம் கொண்டுவந்து விட்டாள். அப்பொழுது அவள் துதிப்பாடல் பாடினாள். **1 சாமுவேல் 2:9-ல் அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்.** பாதங்கள் என்றால் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நம்முடைய நடைகளை குறிக்கிறது. நம்முடைய பாதங்களை இடறிப்போக சத்துரு மறைவான கண்ணிகளையும், குழிகளையும் வைப்பான். கர்த்தருடைய வழியில் நடக்க முடியாதபடி பல தடைகற்களைக் கொண்டு வருவான். ஆனாலும் நம் தேவன் **சங்கீதம் 91:11,12-ல் "உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்".**

**"உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள்"** என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். எவ்வளவு கரிசனையுள்ள தேவன்! எத்தனை அன்புள்ளவர் நம் தேவன். நம்முடைய பாதங்களை இடறும்படியாக சத்துரு குழியை வெட்டினாலும், கண்ணிகளை வைத்தாலும், அவனே அதில் விழுவான். அவனுடைய கால்களே கண்ணியில் சிக்கும். நம்மை அவர் எல்லாத் தீங்கிற்கும் விலக்கிக்காப்பார்.

சங்கீதம் 91:13-ல் சிங்கத்தின் மேலும் விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய் என்று சொல்லியபடி தேவனுடைய பிள்ளையே உன் பாதங்கள் எப்படிப்பட்டது தெரியுமா! சிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதிக்கும் உன் பாதங்கள்.

ரோமர் 16:20-ல் சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்.

**தேவனுடைய பிள்ளையே அவரை நீ இரட்சகராக ஏற்றுக்கொண்டாயே! அவர் உன் பாதங்களை எதற்காக காக்கிறார் தெரியுமா! அவருடைய சத்துருவை உன் பாதங்களின் கீழ் நசுக்கிப் போடும்படியாக அல்லேலூயா!.**

சங்கீதம் 18:36-ல் என் கால்கள் வழுவாதபடிக்கு, நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர்.

சங்கீதம் 94:18-ல் என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது.

கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தங்களை விசுவாசத்தோடு அறிக்கை செய்ய வேண்டும்.

பரிசுத்தப் போராட்டமா? விசுவாச தளர்ச்சியா? தவறான உறவுகளில் சிக்கவைக்கும் சூழ்நிலைகளா?

எதுவாயினும், எந்த சூழ்நிலையாயிருந்தாலும் வசனத்தை விசுவாசத்தோடு அறிக்கை செய், ஜெயம் தருவார்.

### 4. உன் எலும்புகளை எல்லாம் காப்பாற்றுவார்

**சங்கீதம் 34:19,20-ல் "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.**

**அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார் அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.** எலும்பு என்றால் உள்ளான ஜீவன் (Inner Life).

எலும்புகளின் உட்பகுதியில் தான், நம் உடலுக்குத் தேவையான சிவப்பணுக்கள் (Red blood cells), வெள்ளை அணுக்கள் (white blood cells) மற்றும் ரத்தத் தட்டுக்கள் (platelets) ஆகியவை உற்பத்தியாகின்றன. எலும்புக்குள்ளே இருக்கிற ஜீவனை கர்த்தர் காப்பாற்றுவார். மனுஷனுடைய வெளிப்புற தோற்றத்திற்கு எலும்புகள் தான் முக்கிய காரணம்

ஏசாயா 66:14-ல் யூதா ஜனங்கள் பாபிலோனில் சிறைப்பட்டுப்போன காலத்தில் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாய் ஒரு நல்ல செய்தி வருகிறது. **உங்கள் எலும்புகள் பசும்புல்லைப்போலச் செழிக்கும்.**

எலும்பு, இருதயம் இவைகள் இரண்டும் நம்முடைய உள்ளான வாழ்க்கையைக் குறிக்கின்றது. உள்ளே மகிழ்ச்சி இருந்தால்தான் வெளியிலும் அது பிரதிபலிக்கும். சத்துரு என்ன செய்வான் தெரியுமா? நமக்குள் பாவத்தைக் கொண்டுவந்து நம்முடைய எலும்புகளை உலர்ந்து போக செய்வான்.

**சங்கீதம் 31:10-ல் "என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருஷங்கள் தவிப்பினாலும் கழிந்து போயிற்று, என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று".**

**சங்கீதம் 38:3 ல் "உமது கோபத்தினால் என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை, என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை".**

பாவம் எலும்புகளை உலரச்செய்யும் அதினால்தான் ஆண்டவர் எசேக்கியேல் தீர்க்கதரிசியை எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கிற்கு கொண்டு சென்று, இந்த எலும்புகள் உயிரடையுமா! என்று கேட்டார். **எசேக்கியேல் 37:4,5-ல் "அப்பொழுது அவர் நீ இந்த எலும்புகளைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து, அவைகளை பார்த்துச் சொல்லவேண்டியது என்னவென்றால் உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.**

**கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள்.**

பின்னும் ஆண்டவர் எசேக்கியேலைப் பார்த்துச் சொல்லுகிறார்.

**எசேக்கியேல் 37:11-ல் ''அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே, இதோ, அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று, எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று, நாங்கள் அறுப்புண்டுபோகிறோம் என்கிறார்கள்.**

நம்பிக்கையற்ற சூழ்நிலையா?
குவியல் குவியலாக எலும்புகளா?
செத்துப்போன எலும்புகளல்ல (Dead Bones)
உலர்ந்த எலும்புகள் (Dried Bones ) !!!.

ஆனால் கர்த்தருடைய வார்த்தை உயிரடையச் செய்தது. உன் வாழ்க்கையிலும் கர்த்தருடைய வார்த்தை செத்துப்போன பகுதிகளை உயிர்ப்பிக்கபோகிறது.

நீ விசுவாசி கர்த்தர் நிச்சயம் உனக்காக எல்லாவற்றையும் செய்து முடிப்பார். கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்.

சங்கீதம் 103:3-5-ல் **அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத்திருப்தியாக்குகிறார். கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது.** கர்த்தர் உன் எலும்புகளையெல்லாம் காப்பாற்றுவாராக.

அது மட்டுமல்ல ஏசாயா 66:14-ன் படி, உன் எலும்புகள் பசும்புல்லை போல் செழிக்கும் என்றார். ஏன் பசும்புல்லை போல் செழிக்கும் என்றார்? வெட்டாந்தரையான ஒரு இடத்தில் மழை பெய்தவுடன் ஒரு மாற்றம் உண்டாகும். திடீரென்று பசும்புல் முளைக்கும். அந்த இடத்தையே பசுமையாக செழிப்பாக மாற்றும்.

எப்படி பசும்புல் திடீரென்று தோன்றுகிறதோ அதைப்போல உன்னை உலரப்பண்ணின உன் வாழ்க்கையை கர்த்தர் செழிப்பாக மாற்றப் போகிறார். ஆவியானவர் உன் மேல் ஊற்றப்படுவார் உலர்ந்த வாழ்க்கையை செழிப்பாக மாற்றுவார். கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். ஆமென்.

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

**குறிப்பு: காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.**

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664



# ஆபகூக் : Habakkuk

### புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University,

**யார் இந்த ஆபகூக் ?**

சிறிய தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படும் 12 தீர்க்கரில் ஆபகூக்கும் ஒருவன். மற்ற தீர்க்கதரிசிகள் ஜனங்களை எச்சரித்தும், ஆலோசனைகள் தந்தும் தீர்க்கதரிசனம் உரைத்தனர்.

ஆனால் ஆபகூக் அவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவன். யூதாவில் வாழ்ந்து வந்தான். தன்னைச் சுற்றியிருந்த யூதாவின் மக்களிடம் காணப்பட்ட அநீதிகள், தீமைகள், அக்கிரமங்கள், கொள்ளை, கொடுமை, வழக்குகள், துன்மார்க்கர் நீதிமானை வளைந்துகொள்ளுகிற கொடுமைகள் (1:3,4) ஆகியவற்றைக் கண்டு ஆண்டவரை நோக்கி அபயமிட்டான். கர்த்தரிடம் கேள்வி கேட்டான். கர்த்தரும் பதில் தந்தார். முதல் இரண்டு அதிகாரங்களில் கர்த்தருக்கும் தீர்க்கதரிசிக்குமிடையே நடக்கும் உரையாடல்களைத் தொகுத்து இப்புத்தகம் நமக்குத் தருகிறது. 3ம் அதிகாரம் தீர்க்கதரிசி செய்யும் ஆராதனையும், ஜெபமும் சங்கீதமாகத் தரப்பட்டுள்ளது.

ஆபகூக், யூதாவில் யோயாக்கீம் ஆண்டு வந்த காலத்தில் (கிமு 609-597), தனது ஊழியத்தைச் செய்தான். இக்காலத்திலிருந்து சில வருடங்களிலேயே யூதா பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு செல்லப்பட்டது, தேவாலயம் இடிக்கப்பட்டது, எருசலேமும் யூதாவும் 70 ஆண்டு காலங்கள் அதன்பின்பு பாழாய்க் கிடந்தன.

ஆபகூக்குடன் எரேமியாவும், நாகூமும் யூதாவில் ஊழியம் செய்தனர். தானியேலும் அவன் நண்பர்களும் மற்றும் எசேக்கியேலும் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுச் சென்றதை ஆபகூக் கண்டான்: (கி.மு 606, கி.மு 597): (2இரா 22-23 அதிகாரங்கள்).

**ஆபகூக் என்ற பெயர் :**

“தழுவுதல்”, “அணைத்துக்கொண்டிருத்தல்”, அல்லது “போராடுதல்” என்னும் பல்வேறு அர்த்தங்கள் ஆபகூக் என்ற பெயருக்கு உண்டு. தனது பெயருக்கு ஏற்றவாறே அவனது செயல்பாடுகளும் இருப்பதைக் காண்கிறோம். உடன்படிக்கை ஜனங்களாயிருந்தாலும், யூதாவின் மக்கள் கொடுமை, அக்கிரமம், தீவினைகள், வழக்குகள், வாதுகள் மற்றும் அநீதியினால் நிறைந்திருந்திருந்தனர். கர்த்தர் அவர்களை ஏன் தண்டிக்காமல் விட்டு வைத்திருக்கிறார் என்று ஆபகூக் தேவனோடு போராடினான் (1:2-4).

இப்புத்தகத்தின் கடைசிப் பகுதியில் ஆபகூக் விசுவாசத்தால் ஆண்டவரைத் தழுவி அணைத்துக் கொள்ளுவதையும் நாம் காண்கிறோம் (3:2).

**கர்த்தருக்கும் ஆபகூக் தீர்க்கதரிசிக்கும் இடையே நடந்த உரையாடல்**

**ஆபகூக் தீர்க்கதரிசியின் கேள்விகளும் கர்த்தருடைய பதில்களும்**

**தீர்க்கதரிசியின் கேள்வி-1**

தன்னைச் சுற்றிலும் யூதாவில் நடந்த மாபெரும் அநீதிகளைக் கண்ட ஆபகூக், கர்த்தர் அவர்களை ஏன் தண்டிக்கவில்லை என்று கர்த்தரிடம் கேட்டான் (1:2-4).

**கர்த்தரின் பதில்-1**

உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கி, பாவத்தில் கெட்டுப்போன யூதாவை தண்டித்து சிறையிருப்பில் அனுப்பவும் பாபிலோன் பேரரசைப் பயன்படுத்தப் போகிறேன் என்று கர்த்தர் பதில் தந்தார், (1:5-10).

**தீர்க்கதரிசியின் கேள்வி-2**

யூதா தேசத்தின் மக்கள் பாவம் செய்தாலும் அவர்கள் உடன்படிக்கை மக்களே. ஆனால் பாபிலோனியரோ துன்மார்க்கர்.

'தன்னைபார்க்கிலும் நீதிமானைத் துன்மார்க்கன் விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன' என்று கர்த்தரிடம் ஆபகூக் இரண்டாவது கேள்வியைக் கேட்டான் (1:13-17).

**கர்த்தரின் பதில்-2**

யூதாவை அடிமைகொண்டு சிறைப்படுத்தும் பாபிலோனுக்கு நீதியான தண்டனை உண்டு; ஆனாலும் யூதாவில் கர்த்தரைச் சார்ந்து அவருக்கு பயந்து வாழுகிற நீதிமான்களுக்கோ விடுதலையும் வாழ்வும் உண்டு; "...தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று கர்த்தர் உத்தரவருளினார். இதைக்கேட்ட ஆபகூக் தன்னிலை உணர்ந்து, ஜெபிக்கவும் ஆராதிக்கவும் ஆரம்பிக்கிறான், (3 அதி).

ஆபகூக் புத்தகம் முழுவதும் இந்தப் பொருளடக்கத்தைத் தான் நமக்குத் தருகிறது. எனவே, இங்கு ஆபகூக் புத்தகத்தின் பொருளடக்கத்தைச் சுருக்கமாகத் தருவது மிகவும் பொருத்தமாயிருக்கும் எனக் கருதுகிறேன்:

**ஆபகூக் பொருளடக்கம்:**

1. கர்த்தரை விட்டு, பாவத்தில் வாழும் யூதா தேசத்தின் மக்களை கர்த்தர் நியாயம் விசாரியாமலிருப்பது ஏன்? எப்போது அவர்கள் நியாயம் விசாரிக்கப்படும்? (1:1-4).
2. கர்த்தர், கல்தேயராகிய பாபிலோனியரைக் கொண்டு யூதாவை நியாயம் விசாரிப்பார், (1:5-11).
3. பாவம் செய்து கர்த்தரை விட்டுத்தூரம் போனாலும் யூதாவின் மக்கள் நீதிமான்களே: அவர்கள் உடன்படிக்கையின் மக்கள். மிகவும் தீயவர்களாகவும், துன்மார்க்கராகவும் இருக்கிற கல்தேயரைக் கொண்டு ஏன் அவர்களைத் தண்டிக்க வேண்டும்? (1:12-17).
4. கல்தேயர் (பாபிலோனியர்) மேல் கர்த்தர் அனுப்பும் நியாயத்தீர்ப்பு (அதி. 2).
5. கர்த்தர் தந்த பதிலில் திருப்தியடைந்து ஆபகூக் விசுவாசத்துடன் பாடி ஆராதித்தல் (அதி. 3).

**யூதாவில் ஆபகூக் கண்ட பாவங்கள்:**

தான் வாழ்ந்து வந்த சமுதாயத்தில் காணப்பட்ட பாவங்களைக் கண்டு ஆபகூக் திகைத்து நின்றான். அவன் யூதாவில் கண்ட பாவங்களை 1:2-4-ல் பட்டியலிடுவதைப் பார்க்கிறோம்: விக்கிரக ஆராதனை, சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகளாகிய கொடுமைகள், அக்கிரமம், தீவினைகள், வழக்குகள், வாதுகள் மற்றும் அநீதிகள்.

**பாபிலோனியரில் ஆபகூக் கண்ட பாவங்கள் :**

கொடுமையிலும் துரோகத்திலும் நிறைந்து வாழ்ந்த பாபிலோனியரைத் "**துரோகிகள்**" என்றும் "**துன்மார்க்கர்**" என்றும் ஆபகூக் அழைக்கிறான், (1:13).

இரண்டாம் அதிகாரத்தில் பாபிலோனியரின் பாவங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறான்:

2இரா.24,25 அதிகாரங்களிலும் 2நாளா.36ம் அதிகாரத்திலும் பாபிலோனியர் யூதாதேசத்தின் மேல் படையெடுத்து வந்த விபரங்களைப் பார்க்கிறோம்.

அசீரியாவை வீழ்த்தி உலக வல்லரசாய் எழும்பி வந்த பாபிலோன் யூதாவுக்குச் செய்த கேடுகள் ஏராளம் உண்டு: கிமு 606-ல் யோயாக்கீமும், தானியேலுடன் அவனுடைய நண்பர்களும் சிறைபிடித்துக் கொண்டு போகப்பட்டனர், (2 நாளா.36:5-7; தானி. 1:1-7).

கிமு 597-ல் யோயாக்கீனும். எசேக்கியேலும். அவர்களுடன் 10,000 பேரும் சிறையாகக் கொண்டு செல்லப்பட்டனர், (2இரா 24:8-15).

கிமு 586-ல் சிதேக்கியா மன்னனுடைய கண்கள் பிடுங்கப்பட்டது. அவனுடைய இரண்டு குமாரரும் அவன் முன்னாலேயே கொல்லப்பட்டனர். தேவாலயம் இடிக்கப்பட்டது. எருசலேம் தீக்கிரையாக்கப்பட்டது. ஏழைகள் சிலர் தவிர, மற்ற அனைவரும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு செல்லப்பட்டனர், (2இரா.25 அதி).

மேற்குறிப்பிட்ட சரித்திர சம்பவங்களை ஆபகூக் கண்ணாரக் கண்டான்; பாபிலோனியரின் கொடூரத் துன்மார்க்கத்தைத் தன் புத்தகத்தில் பட்டியலிட்டுள்ளான்.

- அநேக ஜாதியினரைக் கொள்ளையிட்ட பாபிலோனியர் மனுஷ ரத்தத்தைச் சிந்தினர். கொள்ளையுடன் கொடுமையையும் சேர்ந்து நடப்பித்தனர், (2:8). எனவே அவர்களும் கொள்ளையிடப்பட்டு கொடுமையாய் நடத்தப்படுவர்.
- தீமையின் வல்லமைக்குத் தப்பவேண்டுமென்று தனக்குப் பாதுகாப்பான இடத்தைத் தெரிந்துகொண்டு தன் வீட்டுக்குப் பொல்லாத ஆதாயத்தைப் பாபிலோன் தேடிக்கொண்டது. அநேகரை வெட்டிக் கொன்றுபோட்டனர். இது அவர்களுக்கு வெட்கமாக முடியும்; தண்டனையும் உண்டு, (2:9,10).
- பாபிலோனியர் இரத்தப் பழிகளினாலே தங்கள் பட்டணங்களைக் கட்டிக் கொண்டனர். அநியாயத்தினால் தங்களைப் பலப்படுத்திக்கொண்டனர். அதினால் பெலனற்றுப் போய் அக்கினிக்கு இரையாவார்கள், (2:12-13).
- அருவருக்கத்தக்கத் தங்களுடையக் கேடான பழக்க வழக்கங்களை தங்களுடைய எதிராளி நாடுகளின் மக்கள்மேல் திணித்து அவர்களை அவமானப்படுத்தினர். எனவே பாபிலோனியர் இலட்சை (இகழ்ச்சி)யினால் நிரப்பப்படுவார்கள்; கர்த்தருடைய நீதி இதைச் செய்யும், (2:15.16).
- பாபிலோனியர் விக்கிரகங்களையும் சிலைகளையும் செய்து வணங்கி வந்தனர்.

அதன் மூலம் எந்த பயனுமில்லை, கர்த்தரே ஜெயிப்பார். தமது பரிசுத்த ஆலயத்தில் வீற்றிருக்கும் கர்த்தருக்கு முன்பாக பூமியெல்லாம் மௌனமாயிருக்கும், (2:18-20).

### கர்த்தருடைய உன்னதத் திட்டம் :

கர்த்தருக்கும் தனக்கும் இடையே தொடர்ந்த **'கேள்வி-பதில்'** முடிந்து, காரியத்தின் மூலத்தை ஆபகூக் சுருக்கமாகத் தந்துள்ளான்.

- கர்த்தர் யூதாவைத் தண்டித்துத் திருத்துவார்.
- கர்த்தர் பாபிலோனைத் தண்டித்து அழிப்பார்.
- முழு உலகிலும் கர்த்தர் அறியப்பட்டிருப்பார்.

சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும், (2:14).

### "மார்க்க மறுமலர்ச்சியின் தந்தை" ஆபகூக் :

ஆபகூக் 2:4-ல் நாம் வாசிக்கிற சத்தியம் **"...தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்"** தீர்க்கதரிசன வெளிப்பாடாய் கர்த்தர் ஆபகூக்குக்குத் தந்ததாகும்.

இந்த வசனத்தைத்தான் பவுல் ரோமர் 1:17-ல் மேற்கோள்காட்டி எழுதுகிறான்.

கிபி 16ம் நூற்றாண்டில் (கிபி 1517) மார்க்க மறுமலர்ச்சியை ஏற்படுத்தின மார்ட்டின் லூத்தரும் இந்த வேதபகுதியையே தமது மறுமலர்ச்சிக்குக் கருப்பொருளாக எடுத்தாண்டுள்ளார்.

ரோமர் கலாத்தியர் ஆகியவை பவுலின் இரட்சிப்பின் நிருபங்கள் (Salvation Letters) என்று அழைக்கப்படுகின்றன. இந்த நிருபங்களின் அடிப்படைக் கருப்பொருள் வசனமும் ஆபகூக் 2:4 தான்.

தேவனுடைய கிருபையினால், இயேசு கிறிஸ்துவின் மேல் நாம் வைக்கும் விசுவாசத்தினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்பது இந்த நிருபங்களில் பவுல் அழுத்திச் சொல்லும் சத்தியமாகும்.

எனவே, மார்க்க மறுமலர்ச்சிக்கு வித்திட்டது ஆபகூக் சொன்ன **"தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்"** என்ற வசனமே ஆகும். இதனால், ஆபகூக் தீர்க்கனை "மார்க்க மறுமலர்ச்சியின் தந்தை" என்று அழைப்பதும் உண்டு;

### ஆபகூக் 3-ம் அதிகாரம் :

ஆபகூக் 3ம் அதிகாரம் துதியும் ஜெபமும் கலந்த ஒரு சங்கீதமாகும். கர்த்தரைக் கேள்வி கேட்ட ஆபகூக் தனது நிலையினை முற்றும் உணர்ந்து, இங்கு கர்த்தரை ஆராதிக்கத் தொடங்குகிறான். 1-2 வசனங்களில் கர்த்தர் தனக்கு இரக்கம் செய்யவேண்டுமென ஜெபிக்கிறான். 3-15 வசனங்களில் கர்த்தரை தரிசித்தான். ஆபகூக் 3:17-19 வசனங்கள் ஒவ்வொரு விசுவாசியும் போற்றிக் கொண்டாடும் வசனங்களாகும்: தனது செல்வங்களனைத்தும் தன்னைவிட்டு எடுபட்டுப் போனாலும் தான் கர்த்தரை நம்பிப் பொறுமையுடன் கர்த்திருப்பேன் என்றும், கர்த்தரில் களிகூர்ந்து மகிழுவேன் என்றும், கர்த்தரையே உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுவேன் என்றும் ஆபகூக் தீர்மானிக்கிறான்.

ஒவ்வொரு விசுவாசியும் ஆபகூக்கின் அனுபவத்திற்குக் கடந்துசெல்லக் கர்த்தர் கிருபை அருளுவாராக!

# தேவனுடைய வார்த்தை
## சங்கீதம் 119

119-ம் சங்கீதத்தில் தேவனுடைய வார்த்தையைக் குறித்து ஏறக்குறைய ஒவ்வொரு வசனத்திலும் கூறப்பட்டுள்ளது. அவைகள் வசனத்தைக் குறித்து சொல்வதை கீழே காண்போம்.

### I. தேவனுடைய பிள்ளைகள் செய்ய வேண்டியவை எவை?

- நாம் தேவனின் கற்பனையில் நடக்க வேண்டும் (119:1).
- நாம் அவருடைய கட்டளைகளைக் கடைபிடிக்க வேண்டும் (119:4,9) .
- நாம் அவைகளை இருதயத்தில் மறைத்து வைக்க வேண்டும் (119:11).
- நாம் அவைகளை தியானிக்க வேண்டும் (119:15).
- நாம் அவைகளை மறக்கக் கூடாது (119:6).

### II. தேவன் நமக்கு (நமக்காய்) என்ன செய்வார்?

- அவருடைய வார்த்தையினால் நம்மை பலப்படுத்துகிறார் (119:28).
- அவருடைய வார்த்தையினால் நம்மை இரட்சிக்கிறார் (119:41).
- அவருடைய வார்த்தையினால் நம்மை தேற்றுகிறார் (119:50,76).
- அவருடைய வார்த்தையினால் நம்மை உயிர்பிக்கிறார் (119:25).
- அவருடைய வார்த்தையினால் நம்மை வழிநடத்துகிறார் (119:105).

### III. அவருடைய வார்த்தை எப்படிபட்டது?

- அது உண்மையாயிருக்கிறது (119:86).
- அது நிலையாயிருக்கிறது (119:89).
- அது இனிமையாயிருக்கிறது (119:103).
- அது தீபமாயிருக்கிறது (119:105).
- அது ஒளியாயிருக்கிறது (119:105).



### IV. தேவனுடைய வார்த்தை எதனால் இன்பம் தரக்கூடியதாக இருக்கிறது?

- தேவனுடைய வார்த்தை சரியானது (119:128).
- தேவனுடைய வார்த்தை விலையேறப் பெற்றது (119:127).
- தேவனுடைய வார்த்தை அதிசயமானது (119:129).
- தேவனுடைய வார்த்தை புடமிடப்பட்டது மற்றும் சமூலமும் சத்தியமானது (119:140,160).
- தேவனுடைய வார்த்தை மகிழ்ச்சியானது (119:174).



# மாறிவரும் சூழலில் அருட்பணியில் சபையின் பங்கு

Rev. S.G. பிரேம்குமார்

செயலாளர், தமிழ் பிரதேச வடமேற்கு மிஷன் இலாக்கா

TAMIL DISTRICT MISSIONS India and beyond...

## இன்றைய சபைகள் தேவனுடைய பிரதான கட்டளையை எவ்வாறு நிறைவேற்றலாம்?

**“ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், எல்லா ஜாதிகளையும் சீஷராக்குங்கள்”**

ஒரு தந்தையின் இதயம் தனது எல்லா பிள்ளைகளையும் நேசிப்பதைப் போல, பிதாவின் இதயமும் உலகிலுள்ள எல்லா மக்களையும் நேசிக்கிறது. மொழி, இனம், நாடு, கலாச்சாரம், சமூக நிலை போன்ற எந்த வேறுபாடும் தேவனுடைய அன்பிற்கு எல்லையாக இருப்பதில்லை. எல்லா மக்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே அவரது விருப்பம். அதனால் தான் இயேசு கிறிஸ்து, தமது பூமிக்குரிய ஊழியத்தின் இறுதியில், தமது சீஷர்களிடம் ஒரு முக்கியமான பொறுப்பை ஒப்படைத்தார். ‘ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்’ (மத்தேயு 28:19). இது இயேசுவின் பிரதான கட்டளை. இந்தக் கட்டளை முதல் நூற்றாண்டு சீஷர்களுக்காக மட்டுமல்ல; இன்றும் உலகம் முழுவதிலும் உள்ள ஒவ்வொரு சபைக்கும், ஒவ்வொரு போதகருக்கும், ஒவ்வொரு விசுவாசிக்கும் உரியது.

உலகம் இன்று வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. எல்லைகள் சுருங்குகின்றன. மக்கள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கும், ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கும் இடம் பெயர்கின்றனர். பல்வேறு கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்கள் நமது நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்கின்றனர். தகவல் தொழில்நுட்பம் உலகத்தை ஒரு சிறிய கிராமமாக மாற்றியுள்ளது. இந்த மாற்றங்கள் அனைத்தும் சபைக்கு ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகின்றன. மாறிவரும் இந்தச் சூழலில், தேவனுடைய பிரதான கட்டளையை நாம் எவ்வாறு நிறைவேற்றப் போகிறோம்? இதற்கான பதில், உள்ளூர் சபைகளின் அருட்பணி குறித்த தரிசனத்தில் தான் உள்ளது.

### அருட்பணி – சபையின் அடையாளம் :

ஒரு சபை ஏன் இருக்கிறது? இந்தக் கேள்விக்கு பல பதில்கள் கூறலாம். ஆராதனை செய்வதற்காக. தேவ வசனத்தைப் போதிப்பதற்காக, விசுவாசிகளை ஆவிக்குரிய வளர்ச்சியில் நடத்துவதற்காக. ஐக்கியத்தை வளர்ப்பதற்காக. சமூகத்திற்கு ஒளியாக இருப்பதற்காக, இவை அனைத்தும் உண்மை. ஆனால் இவற்றை ஒன்றிணைக்கும் ஒரு உயர்ந்த நோக்கம் உள்ளது. அதுதான் அருட்பணி. சபை உலகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு வாழ்வதற்காக உருவாக்கப்பட வில்லை. உலகத்தை கிறிஸ்துவிடம் வழிநடத்துவதற்காகவே அது தேவனால் நிறுவப்பட்டது. ஒரு சபை தனது சுற்றுவட்டாரத்தில் மட்டுமே அக்கறை காட்டாமல், எல்லா மக்களையும் தேவனுடைய பார்வையில் காண தொடங்கும்போது தான், அது தனது உண்மையான அழைப்பை உணர ஆரம்பிக்கிறது.

அருட்பணி அறிஞர் டேவிட் ஜே.போஷ் (Missiologist David J. Bosch) கூறிய ஒரு சிந்தனை இங்கு மிகவும் பொருத்தமானது: ‘அருட்பணி சபையின் ஒரு பணியல்ல; அருட்பணிக்காகவே தேவன் சபையை நிறுவியுள்ளார். ‘இந்தக் கருத்து,

அருட்பணி என்பது சபையின் பல ஊழியங்களில் ஒன்றல்ல என்பதை நினைவூட்டுகிறது. அது சபையின் அடையாளம். அதன் இதயத் துடிப்பு. அதன் இருப்பிற்கான காரணம்.

Assemblies of God இயக்கம் தனது தொடக்க நாட்களிலிருந்தே இந்த உண்மையை ஆழமாகப் புரிந்துகொண்டது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள், எல்லைகளைக் கடந்து, புதிய மொழிகளையும் புதிய கலாச்சாரங் களையும் சந்தித்து, சுவிசேஷத்தை எடுத்துச் சென்றார்கள். அதனால்தான் இன்று உலகின் பல நாடுகளில் தேவ சங்க சபைகள் நிலைபெற்றுள்ளது. இன்றும் அதே அழைப்பு நமக்குமுண்டு. தேவன் நம்முடைய சபைகளை வளரச் செய்வதற்காக மட்டுமல்ல, அவருடைய ராஜ்யம் எல்லா மக்களிடமும் விரிவடைய பயன்படுத்த விரும்புகிறார். அந்த உண்மையை மனதில் கொண்டு, மாறிவரும் உலகில் மாற்று கலாச்சார அருட்பணியில் உள்ளூர் சபையின் பங்கு என்ன என்பதை சிந்திப்போம்.

### மாறிவரும் உலகம் – அருட்பணிக்குத் திறக்கப்பட்ட புதிய கதவுகள்:

ஒவ்வொரு காலத்திலும் தேவன் தமது ஜனங்களுக்கு புதிய வாய்ப்புகளை அளித்திருக்கிறார். தமது நோக்கத்தை நிறைவேற்ற சூழ்நிலைகளைப் பயன்படுத்தினார். அதேபோல், நாம் வாழும் இந்த காலமும் தேவன் திறந்து வைத்திருக்கும் ஒரு அரிய வாய்ப்பின் காலமாகும். உலகம் மாறிவிட்டது. ஆனால் அதைவிட முக்கியமாக, அருட்பணிக்கான வாய்ப்புகள் விரிவடைந்துள்ளன.

ஒரு காலத்தில் நாம் சென்றோம்; இன்று பலர் நம்மிடம் வந்திருக்கிறார்கள். கடந்த காலங்களில் அருட்பணியாளர்கள் புதிய நாடுகளுக்கும் புதிய மக்கள் இனங்களுக்கும் செல்ல பல சிரமங்களை எதிர்கொண்டார்கள். இன்று உலகின் பல பகுதிகளிலிருந்து மக்கள் கல்வி, வேலை, தொழில், மருத்துவம் போன்ற காரணங்களுக்காக நம் நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்கிறார்கள். நம் அயலவர் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். நம் பணியிடத்தில் வேறு மொழி பேசுகிறவர் இருக்கலாம். நம் ஊரில் வேறு மாநிலத்தைச் சேர்ந்த குடும்பங்கள் குடியேறியிருக்கலாம். இதன் அர்த்தம் என்ன? தேவன் பல மக்களை நம் வாசலுக்கு அருகில் கொண்டு வந்திருக்கிறார். இதுவே மாற்று கலாச்சார அருட்பணிக்கான ஒரு புதிய கதவு.

### இந்தியா – அறுவடைக்கான ஒரு தனித்துவமான வயல்நிலம்:

நமது நாடு பல மொழிகள், பல மக்கள் இனங்கள், பல கலாச்சாரங்கள் இணைந்து வாழும் ஒரு தேசம். இந்தப் பன்முகத்தன்மை, சவாலாக மட்டுமல்ல; தேவன் அளித்துள்ள ஒரு பொறுப்பாகவும் பார்க்கப்பட வேண்டும். ஒரு மாநிலத்தில் பிறந்த விசுவாசி, இன்னொரு மாநிலத்தில் பணியாற்றலாம். ஒரு மொழி பேசும் சபை, வேறு மொழி பேசும் மக்களிடையே சாட்சியாக இருக்கலாம். இந்த வாய்ப்புகளை உணர்ந்து செயல்படுவது, இன்றைய சபையின் அழைப்பாகும்.

### இணையவழி சுவிசேஷப் பணி – Digital Evangelism:

ஒரு கைப்பேசியின் மூலம் உலகின் மறுபக்கத்தில் இருக்கும் ஒருவருடன் சில நொடிகளில் தொடர்புகொள்ள முடிகிறது. ஒரு சிறிய காணொளி, ஒரு வேதாகமத் தியானம், ஒரு சாட்சிப் பதிவு-இவை ஆயிரக்கணக்கான மக்களை சென்றடைய முடிகிறது. தொழில்நுட்பம் சபைக்கு மாற்றாக இருக்க முடியாது. ஆனால், அது அருட்பணியை விரிவுபடுத்த தேவன் நமக்குக் கொடுத்துள்ள ஒரு சிறந்த கருவியாக இருக்க முடியும். அதை ஞானத்தோடும் பொறுப்போடும் பயன்படுத்தும்போது, சுவிசேஷம் புதிய கதவுகளைத் திறக்கும்.

### சந்திக்கப்படாத மக்கள் இனங்கள் இன்னும் காத்திருக்கின்றன

மாறிவரும் உலகம் பல வாய்ப்புகளைத் தந்திருந்தாலும், இன்னும் எண்ணற்ற சந்திக்கப்படாத மக்கள் இனங்கள் கிறிஸ்துவின் நற்செய்தியை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன. அவர்களில் பலர் நமது நாட்டிலேயே வாழ்கிறார்கள். சிலர் மலைப்பகுதிகளில். சிலர் நகரங்களின் ஓரங்களில். சிலர் வேறுபட்ட மொழி மற்றும் கலாச்சாரங்களில். இவர்கள் தேவனுடைய பார்வையில் மறக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட வேண்டிய விலைமதிப்பற்ற ஆத்துமாக்களே. ஆகவே சபை தனது பார்வையை விரிவுபடுத்த வேண்டும்.

### அருட்பணியில் இன்றைய சபையின் பங்கு

மாறிவரும் உலகம், சபைக்கு ஒரு அச்சுறுத்தல் அல்ல; அது தேவன் திறந்து வைத்திருக்கும் ஒரு அழைப்பு. அந்த அழைப்பை உணர்ந்து செயல்படும் சபைகளே, நாளைய அறுவடையில் மகிழ்ச்சியோடு பங்குகொள்வார்கள். தேவனுடைய பிரதான கட்டளையை நிறைவேற்றும் பொறுப்பு, அருட்பணி நிறுவனங்களுக்கோ அல்லது அருட்பணியாளர்களுக்கோ மட்டும் ஒப்படைக்கப்படவில்லை. அதை நிறைவேற்றும் மையமாக தேவன் உள்ளூர் சபையையே தேர்ந்தெடுத்துள்ளார். ஒவ்வொரு உள்ளூர் சபையும், தனது ஆராதனை, ஜெபம், போதனை, ஐக்கியம் ஆகியவற்றோடு சேர்ந்து, மாற்று கலாச்சார அருட்பணியை தனது ஊழியத்தின் இதயமாகக் கொள்ள வேண்டும்.

1. **ஜெபிக்கும் சபை:** ஒவ்வொரு அருட்பணியும் ஜெபத்தில் பிறக்கிறது. அந்தியோகியா சபையில் விசுவாசிகள் கர்த்தரை ஆராதித்தும் உபவாசித்தும் கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவி பர்னபாவையும் சவுலையும் பிரித்தெடுத்து அருட்பணிக்காக அனுப்பும்படி கட்டளையிட்டார் (அப்போஸ்தலர் 13:1-3). இந்த நிகழ்வு ஒரு முக்கியமான உண்மையை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. ஒவ்வொரு சபையும், உலக நாடுகளுக்காகவும், சந்திக்கப்படாத மக்கள் இனங்களுக்காகவும், அருட்பணியாளர்களுக்காகவும், புதிய சபைகள் உருவாகுவதற்காகவும் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். ஜெபிக்காத சபை, அருட்பணியின் பாரத்தை இழந்துவிடும். ஜெபிக்கும் சபை, தேவனுடைய இதயத்தைப் பகிர்ந்துகொள்ள தொடங்கும்.
2. **கொடுக்கும் சபை:** அருட்பணி, தரிசனத்தால் மட்டுமல்ல; தாராளமாக கொடுக்கும் மனப்பான்மையாலும் முன்னேறுகிறது. அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்திற்கு பிலிப்பி சபை அளித்த ஆதரவை அவர் மிகுந்த நன்றியுடன் நினைவுகூர்கிறார் (பிலிப்பியர் 4:15-17). அவர்கள் கொடுத்தது ஒரு காணிக்கை மட்டுமல்ல; சுவிசேஷப் பணியில் அவர்கள் இணைந்த பங்காக இருந்தது. இன்றும் ஒவ்வொரு சபையும், தனது வருமானத்தில் ஒரு பகுதியை அருட்பணிக்காக திட்டமிட்டு ஒதுக்க வேண்டும். ஒவ்வொரு விசுவாசியும், ‘என்னால் என்ன செய்ய முடியும்?’ என்று கேட்பதற்கு பதிலாக, ‘தேவனுடைய ராஜ்ய விரிவுக்காக நான் என்ன கொடுக்க முடியும்?‘ என்று சிந்திக்க வேண்டும். அருட்பணிக்காகக் கொடுக்கப்படும் காணிக்கை ஒரு செலவு அல்ல; அது நித்திய அறுவடையில் செய்யப்படும் முதலீடு.
3. **அனுப்பும் சபை:** அந்தியோகியா சபை, தன்னிடம் இருந்த சிறந்த ஊழியர்களையே உலக அருட்பணிக்காக அனுப்பியது. அது அவர்களுக்கு

இழப்பு போலத் தோன்றியிருக்கலாம். ஆனால் தேவனுடைய ராஜ்யத்திற்கு அது ஒரு மகத்தான முதலீடாக அமைந்தது. இன்றும் தேவன் நமது சபைகளிலிருந்து இளைஞர்களையும், குடும்பங்களையும், ஊழியர்களையும் மாற்று கலாச்சார அருட்பணிக்காக அழைக்கிறார். அந்த அழைப்பு வரும்போது, 'எங்கள் சபையின் பலம் குறைந்துவிடுமோ?' என்று பயப்படாமல், 'தேவனுடைய ராஜ்யம் விரிவடைகிறது' என்ற மகிழ்ச்சியுடன் அவர்களை அனுப்பும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும். அனுப்பும் சபை, தேவனுடைய கரங்களில் பெரிதும் பயன்படுத்தப்படும் சபையாக மாறும்.

4. **பயிற்றுவிக்கும் சபை:** அருட்பணிக்கான அழைப்பு ஒரு நாளில் உருவாகாது. அது சிறுவயதிலிருந்தே விதைக்கப்படும் தரிசனத்தின் விளைவு. எனவே, ஞாயிறு பள்ளி, வாலிபர் கூட்டங்கள், வேதாகமப் பயிற்சிகள் ஆகிய அனைத்திலும் உலக அருட்பணியின் பார்வை பகிரப்பட வேண்டும். மாற்று கலாச்சாரங்களை மதிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். வேறுபட்ட மொழி பேசும் மக்களுக்காக ஜெபிக்க ஊக்குவிக்க வேண்டும். தேவன் அழைக்கும்போது, 'இதோ, அடியேன் இருக்கிறேன்' என்று பதிலளிக்கும் தலைமுறையை உருவாக்க வேண்டும். இன்றைய பயிற்சியே, நாளைய அருட்பணித் தலைவர்களை உருவாக்கும்.

5. **வரவேற்கும் சபை:** இன்று பல்வேறு மாநிலங்கள், மொழிகள், நாடுகளைச் சேர்ந்த மக்கள் நமது நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்கிறார்கள். அவர்களை 'வெளியினர்' என்று பார்க்காமல், தேவன் நமது வாசலுக்கு அனுப்பிய வாய்ப்பாகப் பார்க்க வேண்டும். ஒரு அன்பான வரவேற்பு, ஒரு நட்பான உரையாடல், ஒரு ஜெபம், ஒரு உணவு பகிர்வு-இவை அனைத்தும் சுவிசேஷத்திற்கான கதவுகளைத் திறக்கக்கூடியவை.

### அருட்பணி – ஒவ்வொரு விசுவாசியின் பொறுப்பு

மாற்று கலாச்சார அருட்பணி என்பது சிலருக்கான விசேஷ அழைப்பு மட்டுமல்ல; அதை ஆதரிப்பது, ஜெபிப்பது, கொடுப்பது, ஊக்குவிப்பது, அனுப்புவது ஆகியவை ஒவ்வொரு விசுவாசியின் பொறுப்பாகும். ஒரு சபை ஜெபிக்கும்போதும், கொடுக்கும்போதும், அனுப்பும்போதும், பயிற்றுவிக்கும்போதும், வரவேற்கும் போதும் அது தேவனுடைய பிரதான கட்டளையை நடைமுறையில் நிறைவேற்றத் தொடங்குகிறது. அப்படிப்பட்ட சபைகளே, மாறிவரும் உலகில் மாறாத சுவிசேஷத்தை எல்லா மக்கள் இனங்களிடமும் எடுத்துச் செல்லும் தேவனுடைய வல்லமையான கருவிகளாக மாறும்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484

# யோசுவாவைப் போல் யுத்த புருஷராயிருங்கள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புருஷர்கள் யாவருக்கும் தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியத்தின் சார்பில் வாழ்த்துக்கள்.

புருஷர்களே! தேவனின் பாரத்தையும் உங்கள் மேய்ப்பனின் தாகத்தையும் அறிந்தவர்களாய் சபையில் செயல்படுகிறீர்களா? சபைக்கு எத்தனையோ ஆபத்துகள் உள்ளேயும் வெளியேயும் காத்திருக்கிறது. நீங்கள் யோசுவாவைப் போல் யுத்தம் செய்து காப்பாற்றும் புருஷர்களாக உங்களை அர்ப்பணம் செய்ய வேண்டும். யுத்தகளத்தில் இறங்கி தன் உயிரையும் பணயம் வைத்து தேவ நாம மகிமைக்காய் யுத்தம் செய்வதில் ஓர் யுத்த புருஷனான யோசுவா, யுத்தத்தில் எவ்வளவு தீவிரமானவன் என்பதை யோசுவா 10,11 அதிகாரங்களில் பார்க்க முடிகிறது.

யோசுவா மோசேயுடன் இருந்து, வேத வசனத்தின்படி தன்னை காத்துக்கொண்டார். மோசேயின் பணிவிடைகாரனாயிருந்து, ஆசரிப்பு கூடாரத்தில் தங்கி, அதைவிட்டு நீங்காதிருந்தார் என்று யாத்.33:11-ல் வாசிக்கிறோம். மேலும், எண்.13:16-ல் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி மோசே யோசுவாவையும் அனுப்பினார். காலேப் மற்றும் யோசுவாவை தவிர பத்து பேரும் துர்செய்தியை பரப்பினார்கள். அவர்களோ எண்.14:6-9-ல் கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களை காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிபோயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார் என்றார்கள். அதன்படி, தேவன் அவர்களை கானானை காண செய்தார்.

இந்த யோசுவா கர்த்தருக்கு பிரியமாக இருந்தது தேவ நாமத்தை மகிமைப்படுத்தியதால் தேவ ஜனங்களை கானானுக்குள் வழிநடத்துவான் என்பதை தேவன் அறிந்து, மோசே தேவனிடத்தில் தேவனுடைய மந்தையை வழிநடத்த எதிரிகளை ஜெயிக்க ஒரு புருஷனை ஏற்படுத்த ஜெபித்தபோது, கர்த்தர் மோசேயிடம் நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் உன் கையை வைத்து, அவனை தலைவனாக ஏற்படுத்து என்றார் (உபா.34:9). இஸ்ரவேல் ஜனங்கள் கானானை சுதந்தரிக்க முடியாதபடி இருந்த தடைகள் யாவற்றையும் முறியடிக்க தேவன் யோசுவாவை பயன்படுத்தினார்.

இப்படி யுத்த புருஷனாக இருந்து ஆறு வருஷங்களுக்குள் ஆறு விதமான ஜாதியினரையும், 31 இராஜாக்களையும் தோற்கடித்தவன். நான் தான் இதை சாதித்தேன் என்று யோசுவா சொல்லவில்லை. தனக்கென்று எந்த புகழையும் பேரையும் தேடிக்கொள்ளாமல் கர்த்தருக்கே மகிமை செலுத்தியவன் யோசுவா என்ற யுத்த புருஷன்.

திருச்சபையை பாழாக்க பலவிதத்தில் சத்துருக்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

சபைக்கு விரோதமாக மறைவிடத்தில் வைக்கப்படும் கண்ணிவலைகளை ஜெபத்தில் உடைத்தெறியும் யுத்த புருஷர்களாய் காணப்பட வேண்டும். சபைக்குள் இருக்கும் நீங்கள் நமது சபைக்கு நல்ல யோசுவாவாக இன்றே அர்பணியுங்கள், ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

Rev.Dr.J. சாமுவேல் ஜெபராஜ்
தலைவர், தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியம்



# இஸ்லாமியர்கள் தேவனாகிய இயேசு கிறிஸ்துவை பற்றி சொல்லும் தவறான காரியங்கள்


**Rev. ஜேக்கப் இஸ்ரேல்**
இயக்குநர், இஸ்லாமியர் ஊழியங்கள்


## பகுதி – 1
## இஸ்லாமிய சகோதரர்களின் கேள்வி –1

➤ **இயேசு ஒரு நபி (தீர்க்கதரிசி) மட்டும் தான்.**

**பதில்: இயேசு பூமியில் வந்த எல்லா நபியிலும், தீர்க்கதரிசியிலும் மேலான ஆண்டவர்.**

a) இயேசு ஒரு கன்னியினிடத்தில் பிறந்தவர். பூமியில் வந்த வேறு எந்த நபியும் இப்படி கன்னியினிடத்தில் பிறந்ததில்லை. ஆனால் இதற்கு சில இஸ்லாமியர்கள் என்ன சொல்வார்கள் என்றால் "இயேசுவாவது, கன்னியினிடத்தில் பிறந்தவர். ஆனால் ஆதாமும், ஏவாளும் கன்னியின் மூலம் கூட பிறக்கவில்லையே! ஆகவே, அவர்கள் இயேசுவிலும் விசேஷித்தவர்கள் என்றும் சொல்லலாம் அல்லவா?" என்பார்கள். இங்கு சில காரியங்களை ஒப்பிட்டு பார்க்கலாம்.

1) ஆதாம் ஏவாள் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டார்கள். **இயேசு பிசாசை ஜெயித்தார்.**

2) ஆதாம் ஏவாள் பாவம் செய்து ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டப்பட்டனர். **இயேசு பாவத்தை ஜெயித்து, அநேகரை பரலோகத்துக்குள் சேர்த்தார்.**

3) ஆதாம் ஏவாள் மரித்தார்கள், அதோடு அவர்கள் கதை முடிகிறது. **இயேசு மரித்து, மீண்டும் உயிரோடு எழுந்து, இன்றைக்கும் ஜீவிக்கிறார்.** ஆதாரங்கள் 2 ஆம் கேள்விக்கான பதிலில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஆதாரங்கள் வேறு எந்த நபிக்காவது உண்டா?

b) இஸ்லாமியர்கள் சொல்வார்கள். "அல்லா, இயேசு சிலுவையில் மரிக்கவிட வில்லை. அல்லா, இயேசுவை தன்னளவில் உயர்த்திக்கொண்டான்'' என்பார்கள். ஒரு வாதத்திற்காக நாம் இந்த கூற்றை, உண்மைப்போல (நிச்சயம் உண்மையில்லை) எடுத்துக்கொள்ளலாம். இஸ்லாமியர்கள் அல்லாவுக்கு அடுத்து மிகவும் முக்கியமானவராக கருதும் முகமது நபியை கூட, அல்லா தன்னளவில் உயர்த்திக்கொள்ளவில்லையே மற்றும் வேறு எந்த நபியையும் இப்படி அல்லா தன்னளவில் உயர்த்திக்கொள்ளவில்லையே. ஆனால் இயேசுவை மட்டும் ஏன் அல்லா, தன்னளவில் உயர்த்திக்கொண்டான்?

c) மேசியாவை குறித்து சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள், முற்றிலும் இயேசுவில் மிக துல்லியமாக நிறைவேறினது. இந்த புத்தகத்திலும் அநேக இடங்களில், இயேசுவில் நிறைவேறின தீர்க்கதரிசங்களை பார்க்க முடியும். வேறு எந்த நபியின் வாழ்க்கையிலாவது, இப்படி மேசியாவை குறித்து சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறினதுண்டா?

d) யோவான் 17:5-ல் "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்". இந்த வசனத்தின்படி, இயேசு உலகம் உண்டாவதற்கு முன்னே மகிமைபடுத்தப்பட்டவராய் இருந்தார். இஸ்லாமியர்களில் இப்படி 1,24,000-ம் நபிகளில் யாராகிலும் இருந்ததுண்டா!

e) ஆதாம் முதல் முகமது நபி வரை எல்லாரும் பாவம் செய்தவர்கள் என்பதற்கு குரானிலும், ஹதிஸ்களிலும் ஆதாரங்கள் உள்ளது. ஆனால் இயேசுவை பற்றி பரிசுத்த வேதம் சொல்கிறது. "அவர் ஒருவர் மாத்திரம் தான் பூமியில் பிறந்தவர்களில் பரிசுத்தர்" என்று இயேசு பரிசுத்தர் என்பதனை ஒரு இஸ்லாமியர் ஏற்க மறுத்தால் அவர் குரானை மறுப்பவராக காணப்படுவார், ஏனெனில் குரானின் சுராக்களும் (வசனங்களும்), இயேசு பரிசுத்தர் என்பதனை உறுதி செய்கிறது. ஆக இயேசு, நிச்சயம் மற்ற எந்த நபியிலும், தீர்க்கதரிசிகளிலும் மேலான ஆண்டவர் என்பது தெளிவு.

**இஸ்லாமிய சகோதரர்களின் கேள்வி - 2**

**இயேசு ஒரு மனிதன் தான் என்பதற்கு வேதத்தில் வசனங்கள் உள்ளது ?**

a) இயேசு கண்ணீர் விட்டார் கடவுள் கண்ணீர் விடுவாரா?

b) அவருக்கு பசி, தாகம் உண்டாயிற்று. கடவுளுக்கு பசி, தாகம் உண்டாகுமா?

c) இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டார் கடவுள் இப்படி சோதிக்கப்படுவாரா?

d) கடவுள் "என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்" என்று சொல்வாரா?

**பதில் :** முதலாவது நாம் இயேசுவை நன்றாக அறிந்துக்கொள்ள வேண்டும். (இயேசு) கடவுள், மனிதனாக அவதரித்தார். ஆனபடியால், **இயேசு 100% கடவுளாகவும், 100% மனிதனாகவும் இருக்கிறார்.** ஒரு யூதர் இரட்சிக்கப்பட்டார். அவரிடம் "இயேசு மனிதனா? கடவுளா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் கண்ணாடி டம்ளரை எடுத்து, அதில் ஒலிவ எண்ணெய் பாதியும், தண்ணீர் பாதியும் ஊற்றினார். இப்போது இந்த டம்ளரில் என்ன இருக்கிறது என்றார். தண்ணீர் தனியாகவும், எண்ணெய் மேலாக தனியாகவும் இருக்கிறது என்றார்கள். இது போல தான் இயேசுவும், மனிதனாகவும், தேவனாகவும் இருக்கிறார் என்று பதில் அளித்தார். இப்படியிருக்க இயேசு அநேக இடங்களில் தன்னை மனிதனாகவும் வெளிப்படுத்தி உள்ளார். அதே சமயம் அநேக இடங்களில் தன்னை தேவனாகவும் வெளிப்படுத்தி உள்ளார். ஆனால் இஸ்லாமியர்கள், இயேசு மனிதனாக வெளிப்பட்ட காரியங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு அவர் மனிதன் என்று சொல்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னை தேவனாக வெளிப்படுத்தினதை அடுத்த இதழில் பார்க்கலாம்.

எல்லா புகழும் இறைவனாகிய இயேசு ஒருவருக்கே!!!

---

24-ம் பக்க தொடர்ச்சி

கர்த்தரே நம்மை நிறுத்தாமல் தொடர்ந்து சுத்தப்படுத்திக் கொண்டு இருக்கும்போது நாம் ஏன் விரக்தியடைய வேண்டும்? நல்ல நாட்கள் நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கின்றன. கெட்ட நாட்கள் நமக்கு படிப்பினையைக் கொடுக்கின்றன. இரண்டுமே வாழ்வில் முக்கியம். எவ்வளவு கஷ்டப்படுகிறீர்களோ அந்த அளவு நீங்கள் பலம் மிகுந்தவர்களாக மாறுகிறீர்கள். எந்த அளவு நீங்கள் துன்பங்களை சகிக்கிறீர்களோ, அந்த அளவு சகிப்புத் தன்மையும், பொறுமையும் நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். கீழே வேர் பற்றி மேலே கனிக் கொடுப்பீர்கள். ஆகையால் உங்கள் இருதயத்தை தளர விடாதீர்கள். கர்த்தர் நம்மை விட்டுவிடவில்லை. ஆகையால் தைரியம் கொண்டு கர்த்தருக்காக வாழுங்கள். கனி கொடுங்கள். இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார்.

# பரணிச் செடியும் மூங்கில் மரமும்
# (Bamboo and Fern)



ஒரு வாலிபன் தன் வாழ்வில் விரக்தியடைந்தவனாக தன் வேலையை, தன் உறவுகளை, தன் ஆவிக்குரிய வாழ்க்கையை எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தன் வாழ்வையே முடித்துக்கொள்ள எண்ணி காட்டுப் பக்கம் சென்றான். தன் வாழ்வை முடிப்பதற்கு முன் கர்த்தரிடம் ஒரு வார்த்தை பேசிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், 'ஆண்டவரே, நான் ஏன் என் வாழ்க்கையை முடித்துக் கொள்ளக்கூடாது என்பதற்கு ஒரு காரணத்தை உம்மால் கூற முடியுமா?' என்று ஆண்டவரிடம் கேட்டான்.

அப்போது ஆண்டவர், 'உன்னைச் சுற்றி இருக்கிற இந்தக்காட்டில் அந்த மூங்கில் மரத்தையும் அந்த பரணிச் செடியையும் (Fern) பார்' என்றார். 'ஆம் ஆண்டவரே, பார்க்கிறேன்' என்று அந்த வாலிபன் கூறினான். நான் இந்த மரங்களை இந்தக் காட்டில் விதைகளை இட்டபோது இவைகளை நன்கு கவனித்துக் கொண்டேன். இவற்றிற்கு நல்ல தண்ணீர் கொடுத்தேன். நல்ல சூரிய வெளிச்சத்தைக் கொடுத்தேன். இரண்டையும் ஒரே மாதிரியாக வளர்த்தேன். பரணிச்செடி சீக்கிரமாய் பூமியிலிருந்து முளைத்து எழும்பிற்று. இந்த நிலம் முழுவதையும் தன் பச்சை இலைகளினால் அழகாக நிரப்பிற்று. ஆனால் இந்த மூங்கில் விதையோ ஒன்றும் வெளியே கொண்டு வரவில்லை. ஆனால் நான் அந்த மூங்கிலை போனால் போகட்டும் என்று விட்டுவிடவில்லை.

இரண்டாவது வருடமும் பரணிச்செடி அழகாக வளர்ந்தோங்கியது. ஆனால் மூங்கில் விதையிலிருந்து ஒன்றும் வரவில்லை. ஆனால் அதை அப்படியே நான் விட்டுவிடவில்லை.

அதே மாதிரி, மூன்றாம் நான்காம் வருடத்திலும் அந்த மூங்கில் விதையிலிருந்து ஒன்றும் வெளிவரவில்லை. ஆனால் அதை நான் போகட்டும் என்று விட்டுவிடவில்லை.

ஐந்தாவது வருடத்தில் ஒரு சிறு முளை அந்த விதையிலிருந்து முளைத்தெழும்பியது. பரணிச்செடியோடு வைத்துப் பார்க்கும்போது இந்த மூங்கில் ஒன்றும் பெரிதாக தோன்றவில்லை. ஆனால் ஆறே மாதத்தில் இந்த மூங்கில் மரம் 100 அடி உயரத்திற்கு உயரமாக வளர்ந்து பெரிதாக மாறியது. இந்த ஐந்து வருடங்களில், இந்த மூங்கில் மரம் கீழே வேர் விட்டு, மேலே உயர்ந்து வளர்வதற்கு பலத்தை கொடுத்தது. அதுப்போல மகனே, நீ கஷ்டப்பட்ட வருடங்களில் உண்மையாக நீ வேர் விட்டுக் கொண்டிருந்தாய். இந்த மூங்கில் மரத்தை நான் எப்படி கைவிட்டு விடவில்லையோ அதுப்போல உன்னையும் நான் விட்டுவிடவில்லை. உன்னை மற்றவர்களோடு ஒப்பிட்டு பார்த்து அதிருப்தி அடையாதே. பரணிச்செடியை நான் வைத்ததற்கு ஒரு நோக்கம் உண்டென்றால், மூங்கிலுக்கு வேறு ஒரு நோக்கம் உண்டு. ஆனால் இரண்டுமே இந்த காட்டை அழகுப்படுத்துகிறது. அதுப்போல உன்னுடைய நேரமும் வரும், உன் நிலைமையும் மேலே உயரும் அது வரை பொறுத்திரு என்றார்.

நம் ஆண்டவர் நம்மை கனி கொடுக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார். நாமோ கனிக்கொடாதிருக்கும்போது அவர் நம்மை விட்டு விடுவதில்லை. இந்த வருடமும் இருக்கட்டும் என்று சுற்றிலும் கொத்தி, எருப்போட்டு நம்மை வளர்க்கிறார். நம்மை ஒருபோதும் சுத்தப்படுத்தி, எருப்போடுவதை அவர் நிறுத்துவதே இல்லை. அடுத்த வருடமாவது கனிக்கொடுக்க மாட்டோமாவென்று அவர் தொடர்ந்து காத்திருக்கிறார்.

– இதன் தொடர்ச்சி 23-ம் பக்கம் பார்க்கவும்



# தமிழ்பிரதேச மத்திய வாலிபர் ஊழியம்


**Rev. S. கோபிநாத்**

President, Christ's Ambassadors


## "MIGHTY WARRIOR IN THE WINEPRESS"

## திராட்சை ஆலையில் பராக்கிரமசாலி

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். எதிரிகளின் ஒடுக்குதலாலும் பயத்தாலும் குகைகளிலும் மறைவிடங்களிலும் ஒளிந்து வாழ்ந்த காலத்தில், கர்த்தருடைய தூதன் பயந்து நடுங்கிக் கொண்டிருந்த கிதியோனுக்குக் தரிசனமாகி: 'பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்' என்றார் (நியாயாதிபதிகள் 6:1–12).

### 1. DIVINE ENCOUNTER IN THE MIDST OF FEAR

### பயத்தின் நடுவில் தேவ சந்திப்பு :

நியாயாதிபதிகள் 6:1–12 வசனங்களில் நாம் காணும் கிதியோனின் சூழ்நிலை, இன்றைய 21–ஆம் நூற்றாண்டு வாலிபர்களின் அக உலகிற்கு மிகவும் நெருக்கமானது. அக்காலத்தில் மீதியானியர்களின் கொள்ளையடிப்பிற்கும் வன்முறைக்கும் பயந்து, இஸ்ரவேலர்கள் மலைகளின் குகைகளிலும் அரண்களிலும் தஞ்சம் புகுந்தனர். கிதியோன் தன் குடும்பத்தின் பசியைப் போக்க, கோதுமையை வழக்கமான திறந்த வெளியில் தூற்றாமல், எதிரிகளின் கண்ணில் படாதவாறு திராட்சை ஆலையின் மறைவிடத்தில் போரடித்துக் கொண்டிருந்தான். அவனது ஒவ்வொரு அசைவிலும் பயமும், எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமற்றதன்மையும், பதற்றமுமே நிறைந்திருந்தது.

இன்றைய நவீன கால வாலிபர்களின் நிலையும் இதிலிருந்து வேறுபட்டதல்ல. வெளிப்படையாக சமூக ஊடகங்களில் மகிழ்ச்சியாக வாழ்வது போலக் காட்டிக் கொண்டாலும், பெரும்பாலான வாலிபர்களின் உள்ளத்திற்குள் பயம் நிறைந்திருக்கிறது. தொழில் மற்றும் எதிர்காலம் பற்றிய பயம், குடும்பத்தின் எதிர்பார்ப்புகளால் வரும் அழுத்தம், தோல்வி பயம், மற்றவர்களோடு தம்மை ஒப்பிட்டுப் பார்த்து உருவாகும் தாழ்வு மனப்பான்மை மற்றும் ரகசிய அடிமைத்தனங்கள் என பலவிதமான 'திராட்சை ஆலை மறைவிடங்களில்' இன்றைய தலைமுறை முடங்கிக் கிடக்கிறது.

ஆனால், வேதாகமத்தின் மிக அற்புதமான உண்மை என்னவென்றால், கர்த்தருடைய தூதன் கிதியோனைச் சந்தித்தது அவன் பெரும் தளபதியாகப் போர்க்களத்தில் நின்றபோதோ அல்லது தைரியமாகச் சொற்பொழிவு ஆற்றியபோதோ அல்ல; மாறாக, அவன் பயந்து நடுங்கி, ஒளிந்து வேலை செய்து கொண்டிருந்த அந்தத் திராட்சை ஆலையின் நடுவில்தான்! தேவன் அவன் பயத்தின் நிலையைப் பொருட்படுத்தாமல், அவனுக்குள் மறைந்திருந்த பரம அழைப்பைக் கண்டு, 'பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்' என்று அழைத்தார்.

அன்பான வாலிபரே! இன்றைக்கு நீங்கள் எந்த விதமான பயத்தின் நடுவில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், அதே இடத்திற்கே தேவன் உங்களைத் தேடி வருகிறார். நீங்கள் பரிபூரண தைரியசாலியாக மாறும்வரை தேவன் காத்திருப்பதில்லை; உங்கள் பயத்தின் நடுவிலேயே அவருடைய பரிசுத்த பிரசன்னமும், தெய்வீக சந்திப்பும் உங்களை வந்தடைகிறது. அந்த தேவ சந்திப்புதான் உங்கள் பயத்தின் முகமூடியைக் கிழித்து, உங்களை தேசத்திற்கு ஆசீர்வாதமான தலைவனாக உருமாற்றுகிறது!

உங்கள் பயம் தேவனுடைய திட்டத்திற்குத் தடையல்ல! தேவன் உங்களை நீங்கள் இருக்கும் பயத்தின் நிலையைக் கொண்டு மதிப்பிடுவதில்லை; மாறாக, அவருடைய பிரசன்னத்தால் நீங்கள் மாறப்போகும் பராக்கிரமசாலியின் நிலையைக் கொண்டே உங்களை அழைக்கிறார்!

## 2. STEP OUT OF THE HIDEOUT

### ஒளிந்திருக்கும் இடத்தை விட்டு வெளியே வாருங்கள்:

தேவன் கிதியோனை அவன் ஒளிந்திருந்த திராட்சை ஆலையிலேயே சந்தித்து, அங்கிருந்து வெளியே வரும்படி அழைத்தார். அன்பான வாலிபரே, உங்களுடைய 'திராட்சை ஆலை' என்பது எது? அது உங்கள் வகுப்பறையாகவோ, பட்டறையாகவோ, அலுவலகமாகவோ அல்லது நீங்கள் முடங்கிக்கிடக்கும் ஏதோவொரு எல்லைக் கோடாகவோ இருக்கலாம். அதனை விட்டு தைரியமாக வெளியே வாருங்கள்!

தேவனுடைய ராஜ்யத்தில் பயனுள்ள பாத்திரமாகவும், உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும், தேசத்திற்கும் பெரும் ஆசீர்வாதமாகவும் இருக்கும்படி இயேசு கிறிஸ்து உங்களை அழைக்கிறார். கிதியோன் எல்லாவற்றையும் சாதித்து அமர்ந்திருந்த பின்பு தேவன் அவனைக் கண்டுகொள்ளவில்லை; மாறாக அவன் பயந்து ஒளிந்திருந்த இரகசிய இடத்திலேயே தேவன் அவனைக் கண்டுகொண்டார்.

உங்களுடைய நேர்மையான கேள்விகளை ஜெபத்திற்கும், வேதத்திற்கும் முன் கொண்டு வாருங்கள். தேவனுடைய வார்த்தைக்கும், தலைவர்களுக்கும் (போதகர்கள்) கீழ்ப்படியுங்கள். கீழ்ப்படிதலே அடுத்தகட்ட நிலைக்கு உங்களைக் கொண்டு செல்லும்.

இன்று உங்களை தேவனுக்கு முழுமையாக அர்ப்பணிக்கும்போது, 'திராட்சை ஆலை' உங்களின் நிரந்தர முகவரி அல்ல. கர்த்தர் உங்கள் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குவார்!

## 3. EMBRACE AND EXECUTE THE DIVINE WILL

### தேவ சித்தம் செய்ய முன்வாருங்கள் :

எக்காளத்தை ஊதுவதற்கு முன்பாகவும், போர்க்களத்திற்குச் செல்வதற்கு முன்பாகவும் செய்ய வேண்டிய முதல் பணி ஒன்று இருந்தது. கிதியோனுக்குக் கொடுக்கப்பட்ட முதல் பணி நேரடியாக மீதியானியரைத் தாக்குவதோ அல்லது எக்காளத்தை ஊதி ஆட்களைத் திரட்டுவதோ அல்ல. மாறாக, தன் தகப்பனின் வீடான பாகால் பலிபீடத்தை இடித்து, அதன் அருகிலுள்ள அஷேரா தோப்புத் தூணை வெட்டிப்போட்டு, கர்த்தருக்குச் சரியான முறையில் ஒரு பலிபீடத்தைக் கட்டி தேவனுக்குப் பலி செலுத்த வேண்டும் என்பதே தேவ சித்தமாய் இருந்தது.

அக்காலத்தில் பாகால் என்பது மழைக்கும் செழிப்புக்கும் உரிய தெய்வமாக வழிபடப்பட்டது. அஷேரா தூண் வழிபாடு மழை, பயிர், கால்நடைகள் மற்றும் விவசாயத்திற்கு உதவும் தெய்வமாகப் பின்பற்றப்பட்டு, இஸ்ரவேலரும் அதில் மயங்கி வாழ்ந்து வந்தனர். இஸ்ரவேலர் மீதியானியரின் ஒடுக்குதலால் கதறியபோதும், தேவனுடன் பண்ணின உடன்படிக்கையை மறந்து அந்நிய வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

இன்றைக்கு நாமும் நமது வாழ்வின் மேன்மையான நோக்கத்திற்குத் தொடர்பில்லாமல், சமூக ஊடகங்கள், நவீன உலக அடையாளங்கள் மற்றும் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களில் சிக்குண்டு தேவனை விட்டுத் தூரமாய் விலகியிருக்கிறோம். இவற்றையெல்லாம் முதல் இடித்துத் தள்ளுங்கள்! கர்த்தருக்கென்று உங்கள் இருதயத்தில் ஒரு பரிசுத்த பலிபீடத்தைக் கட்டி, அதை ஆராதனைக்களமாக்கி, தேவ சித்தத்திற்கு உங்களை முற்றிலும் அர்ப்பணியுங்கள். ரோமர் 12:1-ன் படி சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள் அதுவே தேவனுக்கு பிரியமான ஆராதனை.

### 4. RISE WITH COURAGE TO LEAD

**தைரியத்துடன் புறப்பட்டு வாருங்கள் :**

கிதியோன் தனது தகப்பனின் குடும்பத்தாருக்கும் ஊர் ஜனங்களுக்கும் பயந்ததினால், பத்து வேலைக்காரர்களைச் சேர்த்துக்கொண்டு இரவோடு இரவாக சென்று பாகால் பலிபீடத்தை இடித்துப்போட்டான். ஆம், தைரியம் சில நேரங்களில் இரவில்கூட தொடங்கலாம்! இந்த பயம் கலந்த தைரியத்தை வேதம் இகழவில்லை, வீணானது என்று தள்ளவுமில்லை. கிதியோனின் கீழ்ப்படிதல் ஆரம்பத்தில் பயம் கலந்ததாக இருந்தாலும், அது உண்மையான கீழ்ப்படிதலாக இருந்தது.

கிதியோனின் இரகசிய செயலை, தேசத்தை வழிநடத்தும் பகிரங்க தலைமையாக மாற்ற தேவனால் முடியும்! கிதியோன் பாகால் பலிபீடத்தை அகற்றி கர்த்தருக்குச் சரியான முறையில் பலிபீடத்தைக் கட்டி கிரயம் செலுத்தினான். அதுபோல நமக்குள் காணப்படும் அருவருப்பான பலிபீடங்களை நமது இருதயத்திலிருந்தும் சிந்தனையிருந்தும் முற்றிலும் அகற்றுவோம். பரிசுத்த பலிபீடத்தைக் கட்டி நம்மை அர்ப்பணிப்போம்.

இயேசு கிறிஸ்துவின் கற்பனையையும் சித்தத்தையும் நிறைவேற்றுவோம். பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆளுகைசெய்து, பயந்திருந்த கிதியோனை உண்மையான பராக்கிரமசாலியாகவும் தலைவனாகவும் உயர்த்தினதுபோல, உங்களையும் தேசத்திற்கு ஒரு சிறந்த தலைவனாக மாற்றுவார்!

கிதியோனே...

ஒளிந்திருக்கும் இடத்தை விட்டு வெளியே வாருங்கள் !

தேவனின் சித்தத்தை அறிந்து செய்ய முன் வாருங்கள் !!

தேவ பலத்தோடும், தைரியத்தோடும் பலிபீடத்தை கட்ட வாருங்கள் !!!

உங்கள் மூலம் மீட்பையும், ஜெயத்தையும் கிறிஸ்து இயேசு கொடுத்திடுவார்.



# இதை நினைத்து புருஷராயிருங்கள்

(பகுதி 8)

## Remember this, and Show yourselves MEN


Rev.R.தாசையா

தேனி மண்டல தலைமைப் போதகர்


### அத்தியாயம் - 4

### தகப்பனும் பிள்ளையும்

அன்பான தகப்பன்மாரே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதத்தில் தகப்பனார் தினத்தை உங்களுடைய சபையில் நீங்கள் கொண்டாடி இருப்பீர்கள். தகப்பன் என்ற உறவின் அர்த்தத்தையும் அநேக சத்தியங்களையும் நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

கடந்த மாதத்தில் ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுடைய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். தன் பிள்ளைகளுக்கு பாதுகாப்பை தரவேண்டும், தன் பிள்ளைகளை நேசிக்க வேண்டும் என்பதைக் குறித்து உங்களோடு கூட பகிர்ந்து கொண்டேன்.

இந்த மாதத்திலும் அதைத் தொடர்ந்து தகப்பனும் பிள்ளையும் என்ற கண்ணோட்டத்தில் சில வேத சத்தியங்களை தியானிக்க தேவன் உதவுவாராக.

ஆதியிலே ஆண்டவர் ஆதாமை (மனுஷனை) அவர் படைக்கும்போதே அவன் சந்ததிகளை பெற்று அந்த சந்ததிகளை தேவசித்தத்தின்படி வளர்ப்பான் என்கிற தொலைநோக்கு பார்வையோடுதான் அவனை உருவாக்கினார். பிள்ளை வளர்ப்பில் தாயின் பங்கு எவ்வளவு முக்கியமோ அதைவிட மிகவும் முக்கியமானது தகப்பனுடைய பங்கு. புருஷராகிய நாம் பலநேரங்களில் பிள்ளை வளர்ப்பை நம்முடைய துணைவியாரிடத்தில் கொடுத்துவிட்டு நாம் ஒதுங்கி விடுகிறோம். பிள்ளைகளை வளர்க்கக்கூடிய விதத்தில் நாம் வளர்த்தால் எதிர்காலத்தில் அவர்கள் நமக்கும் தேசத்துக்கும் தேவனுக்கும் திருச்சபைக்கும் பிரயோஜனமான பிள்ளைகளாக மாறுவார்கள்..

பிள்ளை வளர்ப்பில் தகப்பனுடைய மூன்று முக்கிய குணங்களை கீழே காணலாம்.

#### 1. பிள்ளைகளுக்கு இரங்கும் தகப்பன்

கர்த்தர் நமது தகப்பனாக இருக்கிறபடியால் நாம் தவறு செய்யும்போதும், தேவனோடு முரண்பட்டு நடக்கும்போதும், அவர் கோபப்பட்டாலும், கடிந்துகொண்டாலும், எப்போதும் அல்ல. அவர் தமது சுபாவத்தை மாற்றி, மறுபடியும், நமக்கு இரக்கம் காட்டுகிறார், நம்மோடு இணங்கி போகிறார் (சங்கீதம் 103: 9,13,14; சங்கீதம் 30:5; ஏசாயா 12:1; 48:9; 54:7,8; 57:16).

எனவே **தகப்பனாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளிடத்தில், இரக்கம் காட்டவும், மன்னிக்கவும், அவர்கள் செய்த தவறை மறக்கவும், கற்றுக்கொள்ள வேண்டும்.** சீர்கெட்ட வாழ்க்கை செய்து, சீரடைந்து திரும்பி வந்தவனுக்கும் தகப்பன் இரக்கம் காட்டினான். சீரான வாழ்க்கை செய்து, உள்ளே வரமாட்டேன் என்று முரண்டு பிடித்த மூத்த குமாரனுக்கும், மகனே நீ எப்போதும் என்னோடு இருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாய் இருக்கிறது என்று இரக்கத்தை தகப்பன் வெளிப்படுத்தினான். எனவே இரண்டு பேரையும் தகப்பன் இழந்து போகவில்லை. அந்த வீட்டில் கோபத்துக்கு இடமில்லை, குற்றச்சாட்டுக்கு இடமில்லை,

மனவருத்தத்துக்கு இடமில்லை, சந்தோஷத்துக்கே இடம் இருந்தது (லூக்கா 15:24,28,31).

### 2. பிள்ளைகளுக்காய் ஜெபிக்கும் தகப்பன்

இயேசு இருந்த காலங்களில் பெற்றோர்கள் இயேசுவால் தங்கள் பிள்ளைகள் தொடப்படவேண்டும் என்று விரும்பினார்கள். அவர்களின் விருப்பத்தை இயேசு நிறைவேற்றினார். (மாற்கு10:13,14,16). இயேசுவால் தொடப்படுதல் என்பது அவரது கைகளால் ஆசீர்வதிக்கப்படுவது. உங்கள் பிள்ளைகளின் மனதை, சிந்தனையை, உணர்வை, உணர்ச்சியை, வாழ்க்கையை இயேசு தொடவேண்டும். அப்படி நடந்தால் சரீரம் ஆரோக்கியமாக இருக்கும். வாழ்க்கை ஆசீர்வாதமாக இருக்கும். ஆத்தும மீட்பு உண்டாகும். அசுத்த ஆவியால் பாதிக்கப்பட்ட தன் மகளுக்காக தாய் வேண்டிக்கொண்டாள் (மாற்கு 7:24-29). ஊமையான ஆவிபிடித்த தன் மகனுக்காக தகப்பன் வேண்டிக் கொண்டான் (மாற்கு 9:17-27).

ஜெப ஆலய தலைவன் தன் 12 வயது மகளுக்கு இயேசுவிடம் வேண்டுதல் செய்தான். அந்தப் பிள்ளை உயிர் பிழைத்தாள். உணவு அருந்தினாள், அந்த வீட்டின் அழுகை ஆனந்தமாக மாறியது (மாற்கு 5:22,23,24). நாம் நம் பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக, ஞானத்துக்காக, எதிர்காலத்துக்காக, கர்த்தரை அவர்கள் தேடுவதற்காக வேண்டுதல் செய்யும் தகப்பனாக இருக்க வேண்டும். விருந்து செய்யும் நேரத்தில் சந்தோஷத்தின் மிகுதியால் தன் பிள்ளைகள் தேவனை தூஷித்து இருப்பார்கள். அவை மன்னிக்கப்பட பலி செலுத்தும் தகப்பனாக இருந்தான் யோபு (யோபு 1:5).

ஜெபம் செய்ய உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுங்கள். மிகப்பெரிய எழுப்புதல் வீரரான ஜான் வெஸ்லியின் தாயார் சூசனாவெஸ்லி, தனக்கு 19 பிள்ளைகள் இருந்தாலும், வியாழக்கிழமை தோறும் மாலை 5 மணி முதல் 6:00 மணி வரை தன் பிள்ளைகளுக்காக ஜெபிப்பதை வழக்கமாக கொண்டிருந்தார். பின்நாட்களில் அவர்கள் பிள்ளைகளில் இருவர் ஜான்வெஸ்லி மற்றும் சார்லஸ் வெஸ்லி தேசத்தை அசைக்கும் தேவமனிதர்களாக மாறினார்கள். சிம்சோனின் தகப்பன் மனோவா நீர்கொடுக்கும் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும்? அதை எப்படி நடத்த வேண்டும்? என்று தேவனிடம் கேட்டான் (நியாயா.13:12). தேவனிடம் உங்கள் பிள்ளைகளை வளர்க்கும் விதம், நடத்தும் விதத்தை கேட்கும் தகப்பனாக இருங்கள். ஏன்?, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், அதை சரியாக நீங்கள் வளர்க்காவிட்டால் கர்த்தர் கணக்கு கேட்பார். எத்தனையோ தம்பதியினர் நல்லவர்கள், பக்திமான்கள், ஆனால் குழந்தை இல்லை. அப்படி இருக்க உங்களுக்கு தேவன் கொடுத்ததை சரியாக வளர்க்க தெரிந்திருக்க வேண்டாமா? அன்னாள் தேவனிடம் கேட்டாள். தேவன் தந்த சாமுவேல் தேவனுக்கும் மனுஷர்களுக்கும் பிரியமாய் இருந்தான்

### 3. பிள்ளைகளுக்கு மாதிரியான தகப்பன்

உங்கள் வாழ்க்கையில் என்ன இருக்கிறதோ அதுதான் உங்கள் பிள்ளைகளின் வாழ்வில் உண்டாகும். எந்த தவறை நீங்கள் செய்கிறீர்களோ, அதே தவறை உங்கள் பிள்ளைகள் செய்வார்கள். எனவே, உங்கள் வாழ்க்கை அவர்கள் ஒழுக்கமாக வாழ காரணமாக இருக்க வேண்டும் (ஆதியாகமம் 20:2). ஆபிரகாம் தன் மனைவியை சகோதரி என்றான், அதுவே ஈசாக்கின் வாழ்க்கையில் தொடர்ந்தது (ஆதியாகமம் 26:6,7). தவறான வழிகாட்டுதல், தவறான புரிதல்,

தவறான பின்பற்றுதல், தவறான உதாரணத்துக்கு வழிகாட்டும். எனவே நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு சரியானவர்களாய் வாழ்ந்து காட்டுங்கள் (எரே.35:2,6,7).

யோனதாப் தன் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக வாழ்ந்தான். அவர்கள் பிள்ளைகளும் தகப்பனின் முன்மாதிரியை பின்பற்றினார்கள். அது அவர்களை ஆசீர்வாதத்திற்குள்ளே நடத்தியது (எரே.35:19). ஆபிரகாம் பலியிடுதலை பற்றி ஈசாக்கு சொல்லி இருக்கலாம் அல்லது ஆபிரகாம் பலி செலுத்தும்போது கூடவே ஈசாக்கை வைத்திருக்கலாம். எனவேதான், பலி செலுத்தபோகும் ஆபிரகாமிடம் ஈசாக்கு, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே? என்கிறான். தகப்பன் தன் மகனுக்கு முன்மாதிரியை காட்டி இருந்தான்

நியாயாதிபதிகள் 11:29-39-ல் யெப்தா கர்த்தரிடம் பொருத்தனை செய்து அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால் நான் சமாதானத்தோடு வருகையில் என் வீட்டிலிருந்து எது எனக்கு எதிர்கொண்டு வருகிறதோ, அது கர்த்தருக்கு உரியதாகும் என்று பொருத்தனை செய்தான். வெற்றியும் அடைந்தான். திரும்பி வரும்போது ஒரே மகள் யெப்தாவுக்கு முன் வந்தாள் (நியாயாதிபதிகள் 11:30-36). தகப்பனின் உத்தம குணத்தை அறிந்த அவள் அதை நிறைவேற்ற தன்னை ஒப்புக்கொடுத்தது. தகப்பனிடம் அவள் கற்றுக்கொண்ட முன்மாதிரியாகும்.

தீமோத்தேயுவின் பாட்டியிடம் இருந்த விசுவாசம் தீமோத்தேயுவின் தாயிடம் காணப்பட்டது. தாயிடம் காணப்பட்ட விசுவாசம் தீமோத்தேயிடம் காணப்பட்டது (2தீமோ.1:4,5). தகப்பன்மாரே உங்கள் விசுவாசத்தை பிள்ளைகள் அறியும் தகப்பனாக இருங்கள். அப்பொழுது உங்கள் சந்ததி, பக்தி உள்ள சந்ததியாய், ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாக இருக்கும். எதை தேவனிடம் அனுபவித்தீர்களோ, தேவனிடத்தில் பெற்றுக் கொண்டீர்களோ, அது உங்கள் பிள்ளைகள் பின்பற்ற, அதை பத்திரப்படுத்தி காட்டுங்கள். இப்போதிருக்கும் பிள்ளைகள், நீங்கள் சொல்லுகிறதை கேட்டு ஏற்றுக்கொள்ளும் பிள்ளைகள் அல்ல, நீங்கள் அனுபவித்ததை கண்ணால் பார்க்க வேண்டும் என்று நினைக்கிற பிள்ளைகளோடு வாழ்கிறீர்கள் என்பதை நினைவில் வையுங்கள். இஸ்ரவேலரை வழிநடத்தின மோசேயிடம், யெகோவா தேவன் "நான் வனாந்தரத்தில் உங்களுக்கு புசிக்ககொடுத்த அப்பத்தை உங்கள் சந்ததியார் பார்க்கும்படிக்கு உங்கள் சந்ததியார் காப்பதற்காக அதை கர்த்தருடைய சந்நிதியில் வை என்றார். (யாத்.16:32-34). பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமான, ஆசீர்வாதத்தை பெற்றுத்தரும் தகப்பனாய் மாறுவோம்.

தொடரும்.

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்... எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? கர்த்தருக்குள் சந்தோஷமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். ஒரு நாள் ஆசிரியர் ஒருவர் தனது மாணவர்களிடம் ஒரு சிறிய ரப்பரைக் கையில் எடுத்துக் காட்டினார். இந்த ரப்பரைப் பாருங்கள். நாம் பென்சிலால் எழுதும்போது ஏதாவது தவறு ஏற்பட்டால், இந்த ரப்பரைப் பயன்படுத்தி அதை அழிக்கிறோம். ஆனால், அந்த தவறை அழிக்கும் ஒவ்வொரு முறையும் ரப்பர் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து போகிறது. தன் உருவத்தை இழந்தாலும், மற்றவர்களின் தவறைச் சரிசெய்வதே அதன் வேலை என்றார்.

மாணவர்கள் ஆர்வமாக ஆசிரியர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது ஆசிரியர், நம் வாழ்க்கையிலும் இந்த ரப்பரைப் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யார் தெரியுமா? நம் பெற்றோர்கள்! என்றார்.

நாம் சிறு வயதில் பல தவறுகளைச் செய்கிறோம். சில நேரங்களில் பெற்றோரின் பேச்சைக் கேட்பதில்லை. படிப்பில் கவனம் செலுத்தாமல் இருக்கலாம். நண்பர்களுடன் சேர்ந்து தவறான செயல்களில் ஈடுபடலாம். அப்போது பெற்றோர்கள் நம்மை வெறுத்து ஒதுக்கிவிடுவதில்லை. மாறாக, நம்மைத் திருத்தி, நல்ல வழியில் நடத்த முயற்சி செய்கிறார்கள்.

சில நேரங்களில் அவர்கள் நம்மைக் கண்டிக்கிறார்கள். அவர்களின் வார்த்தைகள் நமக்குக் கடினமாகத் தோன்றலாம். ஏன் இப்படிக் கண்டிக்கிறார்கள்? என்று நாம் கோபப்படலாம். ஆனால், அவர்கள் நம்மை காயப்படுத்துவதற்காகக் கண்டிப்பதில்லை. நாம் நல்லவர்களாக வளர வேண்டும் என்பதற்காகத்தான் கண்டிக்கிறார்கள்.

ஒரு ரப்பர் பென்சிலின் தவறை அழிக்கும்போது தன்னையே தேய்த்துக் கொள்கிறது. அதுபோல, பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுக்காகத் தங்களைத் தியாகம் செய்கிறார்கள். நாம் சாப்பிட வேண்டும் என்பதற்காக அவர்கள் பல நேரங்களில் தங்கள் விருப்பங்களை விட்டுக் கொடுக்கிறார்கள். நாம் நல்ல பள்ளியில் படிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் கடினமாக உழைக்கிறார்கள். நாம் நல்ல வாழ்க்கையைப் பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்களுடைய நேரத்தையும், பணத்தையும், உழைப்பையும் செலவிடுகிறார்கள்.

நாம் வளர வளர, அவர்களின் தியாகம் நமக்குத் தெரியாமல் போய்விடுகிறது. நாம் புதிய ஆடைகள் அணிகிறோம். புதிய பொருட்களை வாங்குகிறோம். நல்ல பள்ளி, நல்ல கல்லூரி என்று முன்னேறுகிறோம். ஆனால், அந்த முன்னேற்றத்தின் பின்னால் யாருடைய உழைப்பு இருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு பெரிய மரத்தைப் பார்க்கும்போது அதன் கிளைகளையும், இலைகளையும், பூக்களையும் தான் நாம் பார்க்கிறோம். ஆனால், அந்த மரத்தைத் தாங்கி நிற்கும் வேர்களைப் பார்ப்பதில்லை. பெற்றோர்களும் அந்த வேர்களைப் போன்றவர்கள். அவர்கள் அமைதியாக நமக்காக உழைக்கிறார்கள். அவர்களின் தியாகத்தை உலகம் பார்க்காமல் இருக்கலாம். ஆனால், நம் வாழ்க்கையின் ஒவ்வொரு வெற்றியிலும் அவர்களின் அன்பும் உழைப்பும் இருக்கிறது.

நாம் பள்ளியில் நல்ல மதிப்பெண் பெறும்போது பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். நாம் நல்ல வார்த்தை பேசும்போது அவர்கள் பெருமைப் படுகிறார்கள். நாம் வாழ்க்கையில் முன்னேறும்போது, நம்மைவிட அதிகமாக மகிழ்வது பல நேரங்களில் நம் பெற்றோர்கள் தான். அதனால், நாம் வளர்ந்து பெரியவர்களாக ஆன பிறகு, நம்மை வளர்த்தவர்களை மறந்துவிடக் கூடாது.

தம்பி தங்கச்சி, உண்மையான அன்பு என்றால் என்ன? உண்மையான அன்பு என்பது ஒருவரின் தவறுகளைப் பார்த்து கேலி செய்வது அல்ல. அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி, அதைத் திருத்த உதவுவதுதான் உண்மையான அன்பு.

ஒரு நல்ல நண்பன் நம் தவறைச் சொல்லித் தருவான். ஒரு நல்ல ஆசிரியர் நம்மைத் திருத்துவார். அதுபோல, நம் பெற்றோர்கள் நம்முடைய வாழ்க்கையை நல்ல பாதையில் நடத்த முயற்சி செய்கிறார்கள்.அவர்கள் சில நேரங்களில் இதைச் செய்யாதே, அப்படிப் பேசாதே, நன்றாகப் படி,நல்ல நண்பர்களுடன் பழகுஎன்று சொல்வார்கள். அந்த வார்த்தைகள் நமக்குச் சலிப்பாக இருக்கலாம். ஆனால், அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் அன்பு இருக்கிறது. இன்று நமக்காக பெற்றோர்கள் செய்யும் சிறிய தியாகங்கள் நாளை நம் வாழ்க்கையில் பெரிய பலன்களாக மாறும். ஆகவே, பெற்றோர்கள் நம்மைக் கண்டிக்கும்போது உடனே கோபப்படாமல், அவர்கள் ஏன் இப்படிச் சொல்கிறார்கள்? என்று சிந்திக்க வேண்டும். நாம் தவறு செய்தால் அதை ஒப்புக்கொள்ள வேண்டும். திருத்திக்கொள்ள வேண்டும். பெற்றோர்களின் அறிவுரையை மதிக்க வேண்டும்.

மேலும், பெற்றோர்களை அவர்கள் வயதாகும்போது கவனிப்பதும் நம்முடைய பொறுப்பு. நாம் சிறியவர்களாக இருந்தபோது அவர்கள் நம்மைக் கவனித்தார்கள். நாம் வளர்ந்த பிறகு அவர்களை அன்போடு கவனிக்க வேண்டும். நம் வெற்றியின் பின்னால் நம்முடைய முயற்சி மட்டும் இல்லை. நமக்காக அமைதியாக உழைத்த பலரின் அன்பும் இருக்கிறது. அதில் பெற்றோரின் பங்கு மிகப் பெரியது.

ஒரு ரப்பர் தன்னைத் தேய்த்துக்கொண்டு மற்றவர்களின் தவறுகளை அழிக்கிறது. அதுபோல, பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையில் பலவற்றைத் தியாகம் செய்து, நம்முடைய வாழ்க்கையை அழகாக மாற்றுகிறார்கள். எனவே, பெற்றோர்களை மதிப்போம். அவர்களின் வார்த்தைகளைக் கேட்போம். அவர்களின் தியாகங்களை நினைவில் வைத்திருப்போம். அவர்களுக்கு அன்பையும் மரியாதையையும் கொடுப்போம்.

இறைவேதம் நமக்கு ஒரு முக்கியமான அறிவுரையைத் தருகிறது:

“உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக; உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் இதுவே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது” (எபேசியர் 6:2,3).

எனவே, இன்று முதல் நம் பெற்றோர்களிடம் அன்பாகப் பேசுவோம். அவர்களுக்கு உதவுவோம். அவர்கள் செய்த நன்மைகளை நினைத்துப் பார்ப்போம். அவர்களின் முகத்தில் ஒரு புன்னகையை வரச் செய்வோம். நாம் உயரும்போது நம்மை உயர்த்தியவர்களை மறக்காமல் இருப்பதே உண்மையான வெற்றி.

நம் வாழ்க்கையில் நம்மைத் தேய்த்துக் கொண்டு, நம் தவறுகளை அழித்து, நம்மை நல்லவர்களாக உருவாக்கிய அந்த அன்பான ரப்பர்களைப் போன்ற பெற்றோர்களுக்கு என்றும் நன்றி செலுத்துவோம்.

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 9750381784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...



# வாசனை வீசும் ஜெப ஜீவியம்

## (A FRAGRANT PRAYER LIFE)

**Rev.K. ராஜா**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள் (ரோமர் 12:12).

வாசனை வீசும் ஒரு கிறிஸ்தவ வாழ்க்கைக்கு, உயிர்நாடி ஜெபம் என்று சொன்னால் மறுக்க முடியாது. மனித உடலில் உயிர் நாடித்துடிப்பு இருக்கும்வரை தான் சரீரம் செயல்படுகிறதாயும், கெட்டுப்போகாமலும் இருக்கும். சரீரத்தைவிட்டு உயிர் பிரியுமானால், உயிர் பிரிந்த நேரம் முதலே, சரீரத்தின் அவயவங்கள் கெட்டுப்போக ஆரம்பிக்கின்றன. கெட்டுப்போகிற எந்த ஒரு பொருளிலிருந்தும் துர்நாற்றம் வீசத் துவங்கும்.

அதைப்போல தான், கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜெபம் என்கிற உயிர்த்துடிப்பு நின்று விடுமானால், வாழ்க்கையில் கொஞ்சம், கொஞ்சமாக துர்நாற்றம் வீச ஆரம்பித்து வாழ்க்கை கெட்டுப் போய்விடுகிறது.

தேவபிள்ளைகளின் வாழ்க்கை வெற்றியுள்ளதாகவும், வாசனை வீசுவதாகவும் இருக்க வேண்டுமானால், தேவனோடு உள்ள ஆவிக்குரிய தொடர்பு (உறவு) மிக முக்கியம். அதற்கு உதவி செய்வதுதான் ஜெபம். ஜெபம் என்பது தேவனோடு நமக்கு ஒரு ஆவிக்குரிய உறவை ஏற்படுத்துகிற உயிர் நாடித்துடிப்பைப் போன்றது.

ஆகவே தான், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, தன்னுடைய உலக வாழ்க்கையில் ஜெபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை வேதத்தில் பார்க்கிறோம்.

பொதுவாக, ஜெபம் என்றால் நம்முடைய தேவைகளை தேவனிடத்தில் சொல்லுவது என்று நினைத்துக் கொள்கிறோம். நம்முடைய தேவைகளை தேவனிடத்தில் சொல்லுவது ஜெபத்தின் ஒரு பகுதி மட்டுமே. ஆகவே ஜெபத்தைக் குறித்து புரிந்து கொள்வதற்கு வசதியாக இயேசு கிறிஸ்துவின் ஜெப வாழ்க்கையை தியானத்திற்கு எடுத்து கற்றுக்கொள்ளப் போகிறோம்.

இயேசு கிறிஸ்துவின் ஜெப வாழ்க்கையைக் கவனிக்கும்போது, ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல பார்க்க முடிகிறது. முதலாவது பிதாவோடு இருக்கிற உறவை வளர்த்துக் கொள்வதும், காத்துக்கொள்வதும், இரண்டாவது நடைமுறை வாழ்க்கையில் தேவைகளுக்காக வேண்டிக்கொள்வதும் ஆக இரண்டு பக்கங்கள். அதை இப்படி சொல்லலாம்.

### இயேசு கிறிஸ்துவின் ஜெப வாழ்க்கையின் இரண்டு பக்கங்கள்

#### I. தேவ உறவைக் காத்துக்கொள்ள ஜெபம் : RELATIONSHIP BASED PRAYER

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, பூமியில் மனிதனாக வாழ்ந்தபோது, பிதாவாகிய தேவனோடு உள்ள ஆவிக்குரிய உறவிற்கு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை வேதாகமத்தில் பார்க்க முடியும். அது பூமியில் வாழும் ஒவ்வொரு தேவபிள்ளைக்கும் ஒரு நல்ல முன்மாதிரியாகும்.

அதாவது, எந்த விண்ணப்பங்களையும் எடுத்துக் கொண்டுபோகாமல் முழுக்க முழுக்க தேவபிரசன்னத்தை மட்டுமே முக்கியப்படுத்தி, தேவசமுகத்திற்கு வருவதாகும்.

இயேசு கிறிஸ்துவும் பிதாவின் பிரசன்னத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தேவசமுகம் சென்றார்.

- மத். 14:13,23 - தனித்து ஜெபம்பண்ணச் சென்றார்.
- மத். 17:1 - ஜெபத்தின்போது மறுரூபமானார்.
- மாற்கு 6:46 - ஜெபம் பண்ணும்படி மலையின்மேல் ஏறினார்.
- லூக். 5:16 - வனாந்தரத்தில் தனித்து ஜெபம்பண்ணினார்.
- லூக். 6:12 - மலையின் மேல் ஏறி ஜெபம்பண்ணினார்.
- மாற்கு 1:35 - அதிகாலையில் இருட்டோடே
- யோ. 6:15 - தனியே மலைமேல் ஏறினார்.

Prayer is not asking our needs with God. The Very First Meaning of Prayer is relationship with God.

RELATIONSHIP MEANS
- Talk w ith God
- Feel his Presence
- Rejoice in his Presence

## II. தேவைகள் சந்திக்கப்பட ஜெபம்: NEED BASED PRAYER

- **ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தார் (மத். 14:23 ; 6:41; லூக். 9:16).**

✓ தேவைகள் சந்திக்கப்படுவதற்காக ஜெபித்தார்.

✓ நம்முடைய தேவைகள் சந்திக்கப்படுவதற்கு, நாம் ஜெபம் செய்யவேண்டும்.

- **முக்கியமான தீர்மானம் எடுப்பதற்கு முன் ஜெபித்தார் (லூக்கா 6:12,13,14).**

✓ சீஷர்களை தெரிந்தெடுப்பதற்கு முன் ஜெபித்தார்.

✓ முக்கிய தீர்மானம் எடுப்பதற்கு முன் நாமும் ஜெபம் செய்ய வேண்டும்.

✓ உயர்கல்வி, வேலை வாய்ப்பு. திருமணம் போன்ற முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு முன் கருத்தாய் ஜெபம் செய்யவேண்டும்.

- **கடினமான சூழ்நிலையில் ஜெபம் பண்ணினார் (லூக்கா 22:44).**

✓ இயேசு கிறிஸ்து கடினமான, தாங்கிக்கொள்ள முடியாத சூழ்நிலைகளைச் சந்தித்தபோதும், சோர்ந்து போகாமல் தேவபெலத்திற்காக, தேவசித்தம் நிறைவேறுதலுக்காக ஜெபம் செய்தார்.

✓ நாமும் கடினமான சூழ்நிலையில் மற்றவர்களை ஜெபம் செய்ய சொல்லிவிட்டு சும்மா இருக்கக்கூடாது, நாமே தேவபெலத்திற்காகவும், தேவசித்தத்திற்காகவும் ஜெபம் செய்யவேண்டும்.

- **சோதனை ஜெயிப்பதற்கும், பிசாசை எதிர்ப்பதற்கும் உபவாசித்து ஜெபம்பண்ணினார் (மத். 17:21; 4:1-11).**

✓ இயேசுகிறிஸ்து 40 நாட்கள் உபவாசித்து ஜெபம் செய்தார், உபவாசம் இருந்ததால் சரீரத்தில் பெலவீனமாக இருந்தாலும், ஆவியில் பெலமுள்ளவராக பிசாசை எதிர்த்து வேதவசனத்தைக் கொண்டு மேற்கொண்டார்.

✓ மேலும், பிசாசுகளைத் துரத்துவதற்கு உபவாச ஜெபம் அவசியம் என்பதை சீஷர்களுக்குப் போதித்தார்.

ஆவிக்குரிய வாழ்வில் வெற்றியுள்ளவர்களாக இருப்பதற்கு சோதனைகளை மேற்கொள்வதற்கு உபவாசித்து ஜெபிப்பது அவசியம். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் தேவைகள் சந்திக்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்துவின் மாதிரிகளைப் பின்பற்றி அவசரப்படாமல், நிதானமாக அதே நேரத்தில் கருத்தாய் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஜெபிப்போம். ஏனென்றால்

- **சங். 65:2 தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர்;** • **சங். 40:1 ஜெபத்திற்கு பதில் தருகிறவர்.**

அன்பான மாணவ, மாணவிகளே! ஜெபத்தைப் புரிந்துகொண்டு தேவனிடத்தில் சேருவோம், நம்முடைய வாழ்க்கை நறுமணமாக மாறும், வாசனை வீசும்.



# சிறுவர்களின் மத்தியில் தேவனுடைய சித்தத்தைச் செய்வோம்

**Rev. S.P. ராஜசெல்வம்**
இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்கள். இந்த இதழ் வாயிலாக ஆசிரியர்களாகிய உங்களை சந்திப்பதில் அதிக மகிழ்ச்சி அடைகிறேன்.

...தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1யோவான் 2:17).

**1.சிறுவர் ஊழியம் ஏன் முக்கியமானது?**

ஒரு குழந்தை இன்று உங்கள் வகுப்பில் அமர்ந்திருக்கலாம். அது உங்களுக்கு ஒரு சாதாரண குழந்தையாக தெரியலாம். ஆனால் தேவனுடைய பார்வையில், அந்த பிள்ளைகளின் வாழ்க்கைக்குள் ஒரு எதிர்காலம் இருக்கிறது.

இன்று உங்களிடம் இருக்கும் சிறுவர் நாளை ஒரு நல்ல கிறிஸ்தவ குடும்பத் தலைவராக, ஊழியக்காரராக. போதகராக, மிஷனரியாக, ஞாயிறு பள்ளி ஆசிரியராக இருக்கலாம்; ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கலாம். எனவே சிறுவர் ஊழியம் என்பது பிள்ளைகளை பார்த்துக்கொள்ளும் வேலை அல்ல. அது தேவனுடைய ராஜ்யத்திற்காக அடுத்த தலைமுறையை உருவாக்கும் பரிசுத்த பொறுப்பு.

**2. சிறுவர் ஊழியத்தில் தேவனுடைய சித்தம் என்ன?**

பிள்ளைகள் இயேசுவை அறிய வேண்டும். பிள்ளைகள் இரட்சிப்பின் வழியை அறிய வேண்டும். பிள்ளைகள் தேவனுடைய வார்த்தையை நேசிக்க வேண்டும். பிள்ளைகள் ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளைகள் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ கற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளைகள் தங்களுடைய வாழ்க்கையையும் திறமைகளையும் தேவனுக்குக் கொடுக்க வேண்டும்.

**3. சிறுவர்களை தன்னிடம் கொண்டு வருவது தேவனுடைய சித்தம் என்று இயேசு கிறிஸ்து கூறினார்**

சிறுவர்கள் தன்னிடம் வருவது தன்னிடம் வருவது இயேசு கிறிஸ்து சித்தம் என்று கூறினார். சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் (மாற்கு 10:14). இது சிறுவர் ஊழிய ஆசிரியர்களுக்கான மிக முக்கியமான வசனம். இயேசு, பிள்ளைகள் சபைக்கு வந்தால் பரவாயில்லை என்று மட்டும் சொல்லவில்லை. அவர்களை என்னிடத்தில் வரவிடுங்கள் என்றார். ஆகவே ஆசிரியரின் முதல் பொறுப்பு: பிள்ளைகளை இயேசுவிடம் நடத்துவது. நாம் வெறுமனே Bible story சொல்லக்கூடாது. கதையின் கதாநாயகனாகிய இயேசுவை பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

**4. தேவனுடைய சித்தத்தைச் செய்ய ஆசிரியர் முதலில் தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும்**

- நான் தினமும் ஜெபிக்கிறேனா?
- தேவனுடைய வார்த்தையை வாசிக்கிறேனா?
- என் வாழ்க்கை பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்கிறதா?

- நான் பேசுவது போலவே வாழ்கிறேனா?
- பிள்ளைகள் என்னைப் பார்த்து கிறிஸ்துவைக் காண முடியுமா? ஆசிரியர்கள் தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும். பிள்ளைகள் நாம் சொல்வதைவிட நாம் செய்வதையே அதிகமாகக் கற்றுக்கொள்வார்கள்.

ஆசிரியர் "ஜெபியுங்கள்" என்று சொன்னால் மட்டும் போதாது. அவர் ஜெபிக்கும் வாழ்க்கையைப் பிள்ளைகள் பார்க்க வேண்டும்.

**5. தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு பிள்ளைகளை நேசிக்க வேண்டும்**

இயேசுவின் ஊழியத்தில் குழந்தைகளுக்கு ஒரு சிறப்பு இடம் இருந்தது. சிறுவர் ஊழியத்தில் மிக முக்கியமான ஒன்று அன்பு. ஒரு குழந்தை படிப்பில் நன்றாக இருக்கலாம்; மற்றொரு குழந்தை அமைதியாக இருக்கலாம்; இன்னொரு குழந்தை அதிகமாக பேசலாம்; சில பிள்ளைகள் வீட்டில் பலவிதமான சிரமங்களை சந்தித்திருக்கலாம்; ஆசிரியர் எல்லோரையும் ஒரே அன்புடன் அணுக வேண்டும்.

இந்தக் குழந்தை எனக்கு தொந்தரவு என்று நினைக்காமல், "இந்தக் பிள்ளைகள் தேவன் என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்" என்று பார்க்க வேண்டும்.

**6. தேவனுடைய வார்த்தையை பிள்ளைகளுக்குப் புரியும் விதத்தில் கற்றுக்கொடுக்க வேண்டும்**

2 தீமோ. 3:15-ல், தீமோத்தேயு சிறுவயதிலிருந்தே பரிசுத்த வேதாகமத்தை அறிந்திருந்தான் என்று பார்க்கிறோம். இதிலிருந்து ஒரு முக்கியமான உண்மை. தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்வதற்கு சிறுவயது மிக முக்கியமான காலம். ஆனால் பிள்ளைகளுக்கு பெரியவர்களுக்கான போதனையை அப்படியே சொல்லக்கூடாது. ஆசிரியர் செய்ய வேண்டியது.

வேத வசனம் → விளக்கம் → வாழ்க்கை உதாரணம் → நடைமுறைப் காரியங்கள் மூலம் → ஜெபம் என்ற முறையில் கற்றுக்கொடுக்க வேண்டும்.

**உதாரணமாக:**

பொய் சொல்லக்கூடாது என்று மட்டும் சொல்லாமல்; யாரும் பார்க்காதபோதும் உண்மையைச் சொல்வது தேவனுக்கு பிடிக்கும் என்று விளக்கலாம்.

**7. கதையை மட்டும் சொல்லாமல் வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக்கொடுங்கள்**

சிறுவர் ஊழியத்தில் Bible stories மிகவும் முக்கியம். ஆனால் ஒரு கதை சொல்லிவிட்டு முடித்துவிடக்கூடாது. உதாரணமாக தாவீது - கோலியாத் கதையை எடுத்துக்கொள்ளுங்கள்.

பிள்ளைகள்: தாவீது கோலியாத்தை வென்றான் என்று மட்டும் தெரிந்துகொண்டால் போதாது. அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது: பெரிய பிரச்சனை வந்தாலும் தேவனை நம்ப வேண்டும். அதுதான் வாழ்க்கைப் பாடம்.

**அதேபோல:** நோவா - கீழ்ப்படிதல்; தானியேல் - ஜெபமும் விசுவாசமும்; சாமுவேல்- தேவனுடைய சத்தத்தைக் கேட்பது; யோசேப்பு - மன்னிப்பும் நேர்மையும்; எஸ்தர்- தைரியமும் தேவனுடைய திட்டத்தில் பங்கெடுப்பதும்; இவற்றை பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கையோடு இணைக்க வேண்டும்.

**8. பிள்ளைகளுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுங்கள்**

சிறுவர் ஊழியத்தின் மிகப்பெரிய முதலீடுகளில் ஒன்று ஜெபிக்கக் கற்றுக்கொடுப்பது; ஜெபம் என்பது பெரியவர்களுக்கு மட்டும் அல்ல.பிள்ளைகள் தங்களுக்காக ஜெபிக்க வேண்டும்; பெற்றோருக்காக ஜெபிக்க வேண்டும்; ஆசிரியர்களுக்காக ஜெபிக்க வேண்டும்; நண்பர்களுக்காக ஜெபிக்க வேண்டும்;

சபைக்காக ஜெபிக்க வேண்டும்; தேசத்திற்காக ஜெபிக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு முக்கிய உண்மையைச் சொல்லுங்கள்: "நீ சிறியவனாக இருக்கலாம்; ஆனால் உன் ஜெபம் சிறியது அல்ல".

### 9. பிள்ளைகளை தேவனுடைய சித்தத்தைச் செய்ய பயிற்று விக்க வேண்டும்

சிறுவர் ஊழியம் என்பது ஒவ்வொரு வாரமும் ஒரு Sunday School நடத்துவது மட்டுமல்ல. அது பிள்ளைகளை வாழ்க்கைக்குத் தயார்படுத்துவது. அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டியவை: வீட்டில் பெற்றோரை மதிப்பது; பள்ளியில் நேர்மையாக இருப்பது; நண்பர்களிடத்தில் அன்பாக நடப்பது. தவறு செய்தால் மன்னிப்பு கேட்பது. யாராவது தவறு செய்தால் மன்னிக்க கற்றுக்கொள்வது; சோதனை வந்தால் ஜெபிப்பது; பயம் வந்தால் தேவனை நம்புவது; இவையெல்லாம் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கான பயிற்சிகள்.

### 10. சிறுவர் ஊழிய ஆசிரியர்களுக்கான 7 தீர்மானங்கள்

இன்று நாம் ஏழு தீர்மானங்களை எடுத்துக்கொள்வோம்:

1. ஒவ்வொரு குழந்தையையும் இயேசுவிடம் நடத்துவேன்.
2. தேவனுடைய வார்த்தையை உண்மையோடும் எளிமையோடும் கற்றுக்கொடுப்பேன்.
3. ஒவ்வொரு பிள்ளைகளையும் அன்போடு அணுகுவேன்.
4. பிள்ளைகளுக்காக தொடர்ந்து ஜெபிப்பேன்.
5. என் வாழ்க்கையை அவர்களுக்கு முன்மாதிரியாக வைத்துக்கொள்வேன்.
6. பிள்ளைகளை ஊழியத்திற்கும் தேவனுடைய சித்தத்திற்கும் தயார்படுத்துவேன்.
7. உலகத்தின் தற்காலிக காரியங்களை விட தேவனுடைய நித்திய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பேன்.

### அன்பான ஆசிரியர்களே!

உங்கள் கையில் வேதம் இருக்கலாம்; ஆனால் உங்கள் வாயிலிருந்து தேவனுடைய வார்த்தை புறப்பட வேண்டும். உங்கள் முன் சிறிய பிள்ளைகள் இருக்கலாம்; ஆனால் அவர்களுக்குள் தேவன் வைத்திருக்கும் எதிர்காலம் பெரியது. ஒரு ஆசிரியர் ஒரு குழந்தையை கற்பிக்கிறார் என்று நாம் பார்க்கலாம். ஆனால் தேவன்: நான் ஒரு தலைமுறையை உருவாக்குகிறேன் என்று பார்க்கிறார். எனவே சோர்ந்து போகாதீர்கள். பிள்ளைகள் உடனடியாக கேட்கவில்லை என்றாலும் சோர்ந்து போகாதீர்கள். உங்கள் உழைப்பு வீண் அல்ல. உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோகும்; ஆனால் தேவனுடைய சித்தத்தைச் செய்கிறவர் என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்.

---

## போட்டி எண் : 18 (சரியான விடைகள்)

| | | |
|---|---|---|
| 1. | சர்வ வல்லவர் | யோபு 22:25 |
| 2. | பிணம், கழுகு | யோபு 39:30 |
| 3. | சுவாசம் | யோபு 33:4 |
| 4. | முன்னிலைமையைப், பின்னிலைமையை | யோபு 42:12 |
| 5. | ஞானிகளாயிருக்கிற | யோபு 37:24 |
| 6. | மேட்டிமைகள் | யோபு 13:12 |
| 7. | ஞானிகளல்ல, நீதியை | யோபு 32:9 |
| 8. | பரிதானம், அக்கினி | யோபு 15:34 |
| 9. | ஊன் | யோபு 21:24 |
| 10. | மலைப்பாம்புகளுக்குச், கோட்டான்களுக்குத் | யோபு 30:29 |
| 11. | சிநேகிதர் | யோபு 19:14 |
| 12. | உன்னதங்களில் | யோபு 16:19 |
| 13. | வைக்கோலாகவும், உளுத்தமரமாகவும் | யோபு 41:27 |
| 14. | நியாயம் | யோபு 29:14 |
| 15. | லிவியாதானை | யோபு 41:1 |

## போட்டி எண் : 18 (சரியான விடைகள்...)

| | | | |
|---|---|---|---|
| 16. தூளுக்குத் | யோபு 34:15 | 21. கற்களைக் | யோபு 14:19 |
| 17. போதிக்கும் | யோபு 12:7 | 22. முத்துக்களைப்பார்க்கிலும் | யோபு 28:18 |
| 18. சந்தோஷம் | யோபு 20:4 | 23. நாசியிலும் | யோபு 27:2 |
| 19. பாவிகளைப் | யோபு 24:19 | 24. நீதிமானாய் | யோபு 11:2 |
| 20. புழுக்களைப், தாயும், சகோதரியும் | யோபு 17:14 | 25. விளக்கு | யோபு 18:5 |

## போட்டி எண் : 18 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை:** விஜி; பெனிட்டா; M.ஜீவா; டோரா; கிறிஸ்டி; M.சுமதி; E.கலா; பிரேமலதா; பிரியா; லீதியாள்; சாந்தி; ராணி பிளஸிங்; ராதாமணி; தனபாக்கியம்; கனகவல்லி; பியூலா; ரேஷ்மா; மாலதி; கோகிலா; மதி; V.மகேஷ்வரி; மாரிச்செல்வி; கிரிஜா; குளோரி; எஸ்தர்; இவாஞ்சலின்; புஷ்பவல்லி; பிரபா; சித்ரா பிளஸ்சி; பெனிட்டா ராணி; K.மகேஷ்வரி; J.சுமதி; S.முத்துலெட்சுமி; மயில்; மஞ்சு; மாது; மரகதம்; |**ஆறுமுகநேரி**: D.ஜெயபால்; K.ஜான்சிராணி; கவிதா; பனிமலர்; ஜூலியட்; ஜெயா; அன்சி ரத்தினம்; ஜோதி மீனா; பாக்கியா; செல்வப்பிரியா; அந்தோணி அஜிதா; ஸ்டெர்லின்; B.சுமதி; S.சரோஜா; ஜேம்ஸ் நித்யா; அனிதா; மெர்டன்; வெண்ணிலா எஸ்தர்; லோசினி சௌந்தர்; சிவகாமி எஸ்தர்; அமலி; |**ஸ்ரீ வில்லிபுத்தூர்**: R.வசந்தா; பாஞ்சாலி (Tr); ஜான் பீட்டர்; வெங்கடவள்ளி; நெல்சன் செல்வராஜ்; J.வசந்தா; K.நித்யா; குளோரி; அழகு நாச்சியார்; V.ஜமுனா ராணி; M.சத்யா; P.கிருபா; K.மாதவி; D.மெசி; |**சேத்துப்பட்டு**: மரகதம்; சுகந்தி பெனடிக்; ஜெயராணி; அமுல்மேரி; லஷ்மிகந்தா; ரெக்ஸி ஈஸ்வரன்; மாதரசி; ஃபீரீடா; காஞ்சனா; புனிதமேரி; S.ரேணுகா; ஜெபா விஜய்; லூர்து மேரி; T.ராதா; A.ஷாலினி; R.அமுலு; |**திருச்சி** : மெர்சி சந்திரகலா; D.ஸ்டேன்லி; ஜாஸ்மின் உஷாராணி; A.சாந்தி; ஜீலா கிரேஸ்; உமா மகேஷ்வரி; இயேசு மேரி; வசந்தி முத்து; K.சாந்தி; கிறிஸ்டி மகாலெஷ்மி; ஞானமூர்த்தி; மோனிகா சாமுவேல்; S.மரியா; |**திருநின்றவூர்**: J.லாவண்யா; எடிசன்; ரோஸ்லின் மேரி; P.ஐஸ்வர்யா; எஸ்தர் பவானி; S.தெரசா; கேத்ரின்; ரூத்; ஆனி ஐசக்; M.மாலதி; K.எழிலரசி; |**மடத்துக்குளம்**: D.பரிமளா; ரூத்; ஜெனிட்ட ஜூலியட் மேரி; K.சுகன்யா; C.பரிமளா; ஆல்வின் ராக்லேண்ட்; கிரேஸ் மேரி; சரண்யா; சேர்மக்கனி; மல்லிகா; |**ராதாபுரம்**; P.செல்வப்பிரியா; ஜெமிமா சாமுவேல்; அருள்செல்வி; மல்லிகா; நித்யா; பிரகாசியம்மாள்; ஜெய சாரோன்; மரகதம்: |**நத்தக்காடையூர்**: சங்கீதா; செல்வி; பெனியேல்; கிறிஸ்டன்; தீபிகா; ஏசையன்; அகல்யா; பென்சி; வில்சன்; |**சென்னை**: மல்லிகா; S.பூங்கனி; மெர்லின் ஹெலன் பிரிதியா; மேரிகுட்டி; கண்மணி ராஜேந்திரன்; ஷீலா பிரான்ஸிஸ்; நிர்மலா சேகர்; |**ஆண்டிபட்டி**: தேவபாக்கியம்; R.அருணா தேவி; C.பாப்பாத்தி; P.எஸ்தர்; பூங்கொடி; புளோரியா; |**கோத்தகிரி**: மல்லிகா ஜெனிபர்; எஸ்தர்; D.ஜான்சி; C.பிரசாத்; எஸ்தர் ஜெபகுமார்; |**கடையநல்லூர்**: பெல்சியா; ஆஷா தேவி; வினோலியா; விக்டோரியா; தங்கராஜ்; |**தேனி**: செண்பகபுஷ்பா; திரவியச்செல்வி; தபீத்தாள் ராணி; J.மேரி; பூமணி ஜான்சி; கார்த்திகேயாயினி; |**கோயம்புத்தூர்**: இந்திராணி; கிறிஸ்டினா; நித்யா பெர்க்மான்ஸ்; மேரி டென்சில்; கிறிஸ்டினா அபிகாயில்; ஜோஸ்பின் தனபாக்கியம்; |**எடப்பாடி**: S.மாலதி; அஞ்சலி அரசு; ஜோசப் மேரி; ஹெப்சிபா ஜோயல்; சத்தியமூர்த்தி; கவின்; |**மதுரை** : சாந்தி பால்ராஜ்; கீர்த்தனா ரூபன்; ரூத்மீனா வர்ஷினி; S.கணபதி; |**கவரைப்பேட்டை**: புவனா; தங்கம்; நந்தினி; இவாஞ்சலின்; சலோமி; |**வேப்பம்பட்டு** : M.எஸ்தர்; ஜோஸ்மேரி; P.ஆர்த்தி; S.அமுதா; செல்வி அமலன்; |**நாகலாபுரம்**: N.சாராள்; லில்லி ஜெனட் தங்கம்; குளோரி அம்மாள்; |**இறச்சகுளம்**: புனிதா; சிவதர்ஷினி; P.எஸ்தர்; ஜெஸ்மின்; |**சுரண்டை**: குளோரி ஞானம்; M.ஜெயமேரி; ஜீனா; சரோஜா பாலன்; |**நாகப்பட்டினம்**: கவிதா; ஜான்வெஸ்லி பிரிஸ்லலா; வின்சென்ட்ராஜ்; |**பரமத்திவேலூர்**: L.ஜாய்ஸ் ராணி; ஈஸ்வரி; பாமா; |**உக்கிரன்கோட்டை**: முத்துச்செல்வி; ருக்மணி ஜெயராஜ்; குழந்தை தெரசம்மாள்; |**தூத்துக்குடி**: இவாஞ்சலின்: சுகந்தி ஜீசஸ்; தாசன் மோசஸ்; ஜூலியா இசபெல்லா; ஜாய் செல்வி; |**ஆலங்குளம் (வி)**: ரெஜினா சாரு; ஸ்டெல்லா மேரி; K.ஸ்டெல்லா; R.V.பிளாரன்ஸ்; |**உடுமலைப்பேட்டை**: புஷ்பா எட்வர்டு; வசந்தி சுவாமிநாதன்; சந்தனா மதன்; சூசன்னாள்; |**ராணிப்பேட்டை**: ஹேரி ஜேம்ஸ்; நான்சி; சரண்யா; |**கொத்திமங்கலம்**: காவியா;

## போட்டி எண் : 18 (சரியான விடை எழுதியவர்கள்...)

மேரி குணவதி; உடமா தேவஜோதி; |**கொட்டிவாக்கம்**: அகஸ்டினா மதினா; அமுதவல்லி; எஸ்தர் விஜயராணி; |**புளியங்குடி**: ஜெயமணி; ஜெபஞானம்; சுந்தரி; |**பெரியகுளம்** : ஹெத்சியா ஜோசுவா; ஜேம்ஸ் மேரி; பியூலா ஜோபாய்; | **வேலூர்**: கிறிஸ்டி குணசீலி; உஷா; பியூலா; சரோஜினி தேவி; |**அச்சிறுப்பாக்கம்**: தமிழ்ச்செல்வி; நான்சி சிலம்பு; |**ஆர்க்காடு**: S.மேரி; கிதியோன் பிரபு; சந்தியா; |**பள்ளிக்கரணை**: புவனேஸ்வரி; மகேஷ்வரி; ஜோதி; |**வீராணம்**: ஹெப்சிபா; செல்வின்; செல்வராணி; | **தர்மபுரி**: ரூத்; நீனா; |**களக்காடு**: விமலா டேனியல்; N.சாந்தி; |**ஆம்பூர்**: ரூபி மனோகரன்; கிரிஜா சத்தியா; | **T.N.பாளையம்**: சுஜா; செப்ரின் ஜெர்வின்; |**வீரபாண்டியபட்டணம்**: சுகிர்தா டைட்டஸ்; தேவதாஸ்; |**கரூர்**: ஜெயந்தி தாமஸ்; குட்டி மார்ட்டின்; |**மேலஅனுப்பானடி**: V.ஜெயா; அனிதா; | **அச்சரப்பாக்கம்**: ஆர்த்தி; ஷாலினி பாண்டியன்; தெரசா; செல்வகுமாரி; |**மதுராந்தகம்**: P.ரேணுகா; N.சரண்யா; |**டெலாணிபூர்**: விஜய்; ஜெயந்தி; |**ஓசூர்**: ஜெமிந்தா; மார்க்கஸ் ரிச்சர்டு; |**இளையரசனேந்தல்**: S.மெர்சி; ஜோன் ஆப் ஆர்க்; |**கொடுங்கையூர்**: கிளாரா டெய்சி; ஜோஸ்பின் சாந்தி; |**கும்மிடிப்பூண்டி** : ஜாஸ்லின்; ஜோஸ்லின்; | **வில்லிவாக்கம்**: ஜேஸ்மின் திலகா; சுந்தரி சாம்சன்; |**கொங்காந்தான்பாறை**: சந்திரா ஆல்பர்ட்; K.மேரி; |**கூத்தாநல்லூர்**: **S.A.M.**பாஸ்டியன்; கிளமாண்டின்; |**வில்லியனூர்**: R.செல்லப்பன்; மேரி வின்சென்ட்; |**கிருஷ்ணகிரி**: மஞ்சுளா; அனிதா சைலா; |**கோவில்பட்டி**: செல்வின் பால்; ரேச்சல்; |**நெல்வாய்**: D.அருணா; வெஸ்லி விஜயகுமார்; தாட்சாயினி; கற்பகம்; மலர்விழி; |**திருநெல்வேலி**: இவாங்சலின் சாரோன் ரோஸ்; சுகுணா ரூபி; |**வெள்ளைக்கால்**: கலா சுரேஷ்; |**மூலைக்கரைப்பட்டி**: D.தமிழ்ச்செல்வி; |**பழனி**: R.M.ஆபிரகாம்; |**கட்டப்பெட்டு**; புஷ்பமாலா; |**சிவகங்கை**: ரூத் தேவா; |**வெப்பக்கோட்டை**: R.மரியாள்; |**நாகமலை**: விஜிலா; |**ஆழ்வார்திருநகரி**: பனிமலர்; | **முக்கூடல்**: முத்துகிருஷ்ணன்; | **மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி; |**சீலத்திகுளம்**: ஜெயா; | **சோமரசம்பேட்டை**: இவாஞ்சலின் லீதியாள்; |**புதுக்கோட்டை**: A.லலிதா; |**பரங்குன்றாபரம்**: ஏபல் ஷாம்; |**சரவணம்பட்டி**: ரெஜினாள் மாணிக்கம்; |**விருப்பாட்சிபுரம்**: செல்வநாயகம்; |**நாகர்கோவில்**: S.ஜான்; |**கடலையூர்**: ஆபிரகாம் எஸ்தர்; |**சேலம்**: பெட்ரீஷியா டேவிட்; |**குட்டபாளையம்**: சரளா தேவி; |**காயல்பட்டிணம்** : ஜாய் அபிஷோ; |**கள்ளல்**: அபிஷாக்; |**தென்காசி**: பானு செல்வகணபதி; |**செல்லம்பாளையம்**:தீரனீஷ்; |**பாவூர்சத்திரம்**: ஜெசிலி; |**வெள்ளாண்டி வலசு**: போவாஸ்; |**இடிந்தகரை**: தீபிகா அகஸ்டின்; |**அயனாவரம்**: அமல செல்வி; |**ஸ்பிக்நகர்**: ஆரோக்கியசாமி; ஜெசிந்தா இஸ்ரேல்; |**சமாதானபுரம்**: K.ஹெப்சிபா; | **அகஸ்தியர்பட்டி**: S.நிர்மலா; |**சாத்தூர்**; சரோஜா; |**சிட்லப்பாக்கம்**: P.மோனிக்கா; |**குள்ளம் பாளையம்**: P.S.ருக்மணி; |**திரேஸ்புரம்** : சில்வெஸ்டர்; |**தேவகோட்டை** : மனோஜினி மதன்; |**கக்கலைப்பேட்டை** : மலர்க்கொடி; |**ஆரல்வாய் மொழி**; ஹெப்சி ஜோசப்; |**வளசரவாக்கம்**: ஜெபசெல்வி தனராஜ்; |**குரோம்பேட்டை**: கோமதி குமார்; |**காமராஜபுரம்**: மரகத லீலா; |**உசிலம்பட்டி**: லீலா பாய்; |**சமத்துவபுரம்**: வெள்ளிபுஷ்பம்; |**ஆழ்வார்குறிச்சி**: ஹரிலீலா; | **காசிமேஜர்புரம்**: ரூத்; |**கீழப்பாவூர்**; மெர்லின் ஜாய்; |**மேடவாக்கம்**: பியூலா ஜாய் சுகந்தி; | **மோறை**: S.சந்திரா; |**விருதுநகர்**: சாமுவேல்; |**இடைகால்**: செல்வி ஜான்சன்; |**குற்றாலம்**: வேளாங்கன்னி; |**பாளையங்கோட்டை**: சாந்தகுமாரி; |**கூவத்தூர்**: எட்வர்டு; |**போலையர்புரம்**: நிவேதா; | **ராஜாபுதுக்குடி**: ஹேமா குமார்; |**ஈரோடு**: வில்லியம் ஹேரி; | **திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; |**பெரமனூர்**: ஜான்சி ராணி; |**புதுஆயக்குடி**: எஸ்தர்; |**இழுப்பையூரணி**: வால்டர்சிங்; |**நோலம்பூர்**: ஹில்டா எலிசபெத்; |**திருவண்ணாமலை**: மல்லிகா; |**நெய்யூர்**: ஷீலா ராபர்ட்; |**பழையகாயல்**: எலிசபெத்; |**கடாட்சபுரம்**: ரேவதி ஹில்பர்ட்; |**மேல்மருவத்தூர்**: ஜெபப்பிரியா;| **K.T.C.நகர்**: சிவகாமி சாராள்: |**புதூர்**: ஷீலா பால்ராஜ்; |**திசையன்விளை**: செல்வபாக்கியம்; |**அரசூர்**: ரோஸ்லின் சாந்தி; |**பசுவந்தனை**: கிருபா ஜாப்ரி; |**சக்திநகர்**: ரோஸ்லின் ஜார்ஜ்; |**பொன்னேரி**: ஜெபராணி; |**நாசரேத்** : மெர்சி;|**தஞ்சாவூர்**: தேவகுமார்: |**S.N.பாளையம்**: ரத்தினம்; | **அத்திவாக்கம்**: இன்பசெல்வி; அஞ்சலி; டெய்சி; |**வெண்ணாம்பட்டு**: ஜாஸ்மின் அ.மாதம்மாள்; |**இராமன்புதூர்**: லீதியாள்; |**ஏழாயிரம்பண்ணை**: ஜாய்; | **ஆலங்குளம்**: மோகனபிரியா

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-19
## சங்கீதம் 1-50 (இருப்பிடத்துடன் விடையை நேராக எடுத்து எழுதவும்)

1. யார் புசித்து திருப்தியடைவார்கள்?
2. யார் குற்றவாளிகளாவார்கள்?
3. யார் தன் கர்வத்தினால் கர்த்தரை தேடான்?
4. யார் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள்?
5. யார் வாங்கின கடனை செலுத்தாமல் போகிறான்?
6. யாருக்கு கர்த்தர் அடைக்கலமானவர்?
7. யாருக்கு அநேக வேதனைகளுண்டு?
8. யாருக்கு வேதனைகள் பெருகும்?
9. எது ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது?
10. எது மிகவும் அருமையாயிருக்கிறது?
11. எது துன்மார்க்கனை கொல்லும்?
12. எது புடமிடப்பட்டது?
13. எது நிச்சயம்?
14. எதினால் எது கூப்பிடுகிறது?
15. தேவன் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க எவைகளை கூப்பிடுவார்?
16. தேவன் யார் மேல் நாள்தோறும் சினங்கொள்கிறார்?
17. தேவன் எதை விரும்பி எதை வெறுக்கிறார்?
18. தேவன் நம்மை எதுவரையிலும் நடத்துவார்?
19. கர்த்தர் யாரை சோதித்தறிகிறார்?
20. கர்த்தர் யாரை அருவருக்கிறார்?
21. கர்த்தருடைய சத்தம் எதை பிளக்கும்?
22. கர்த்தருடைய இரகசியம் யாரிடத்தில் இருக்கிறது?
23. கர்த்தரை நாம் எப்படி சேவிக்க வேண்டும்?
24. துதி செய்வது யாருக்கு தகும்?
25. (1-50) அதிகாரங்களில் எத்தனை முறை பாக்கியவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது?

---

குறிப்பு: விடையை புத்தகத்தில் எழுதி அனுப்பாமல் தனியாக பேப்பரில் எழுதி அனுப்பவும்

---

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.10.2026**



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## பெங்களூர் மற்றும் தர்மபுரியில் நடைபெற்ற Global University பட்டமளிப்பு விழாக்கள்




## திருப்பூர் மண்டல மிஷன் கன்வென்ஷன்







## EMPOWERMENT TEACHERS TRAINING PROGRAM







Registered News Paper Regd. No. 8206 / 62




BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664